5

KALANILAYAM.

தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 3] 1930 ஞ நவம்பர் மீ 27உ [No. 47.

பொருளடக்கம்.


1. தலையங்கம் (Leader) 921
2. குறுந்தொகை (பாட்டு 339—361) K. இராமரத்நம் ஐயர் B.A. 923
3. அப்பர் (சிற்பமும் உருவ சாஸ்திரமும்) E. N. தணிகாசலமுதலியார் B.A. B.L. 928
4. இலங்கையின் வீழ்ச்சி—R. சேதுப்பிள்ளை 931
5. மரணத்தருணம் (Richard Steele) 934
6. நம்மாழ்வார் வைபவம் (2ம் பத்து 5ம் தசகம்) K. இராஜகோபாலாசாரியார் B.A., B.L. 935
7. தமிழ்ப்பாடம் (இலக்கணம்) 936
8. வர்த்தமானம் 939


## கலாநிலயம்

19 FEB 1931

### வாலின் நீளம்.

மெய்வலிக் கல்வியும் சண்டெலிச் செல்வமும் பொய்மலி மாயைகள்; அவைகளிற் பொருளில்லை. கஞ்சனிற் கனகனிற் பற்றுடைய மாண்பிலாச் சில மாக்களே ஆற்றலை அளவிறந்து போற்றலாவார். உடைமையால் உற்றதொன்றும் உண்மையாய ஆற்றலன்று. வள்ளுவநாயனுர் இதனை உணர்ந்து, அவ்வுடைமையைத் துறப்பதே ஆற்றலை அடைவதாம் என்பதை ஐந்தவித்தார் திறத்திற்காட்டி வற்புறுத்தினுர். வடமொழியாளர் வழியைப் பின்பற்றியே திருவள்ளுவர் இதனை வரைந்தனராதல் வேண்டும். ஏனெனில் தமிழ்மரபின் தூய்மையோ, திருவள்ளுவர் காட்டிய கரியிற் கிணங்கும்ஆற்றலை ஓர் ஆற்றலென மதித்திடாது. உடல்வலி கைப்பொருள் முதலிய உடைமைகளால் அடையுமொரு நிலையை, பெறுதற்குரிய பேறுகளிற் கடையாயதென்றும் யாவையும்விட்டதால் விளைந்த வாற்றலே தலையாயதென்றும் வடமொழியாளரும் அவர்களைத் தொடர்ந்த வள்ளுவநாயனுரும் கொள்வாரேனும், தனித்தமிழோ, யாவையும் நீத்ததால் வந்தெய்திய ஆற்றலையும் இடையாய ஆற்றலென்றே விடுத்து முதலாயதாக மதிக்குந் தரமுடையது வேறொன்றெனக் குறிக்கொண்டிருத்தல் வேண்டும். இதனிற்குச்சான்று ஆற்றல் என்னுமச்சொல்லே போதும். தனக்குத்தானே இவ்வண்ணங் கரியாவதால் அச்சொல் கடவுளை யொக்கும். மாண்பிலாமாக்களால் மறக்கப்பெறுவதால் மாத்திரமன்றியும்,ஏனையோர்தத்தம் அறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் ஏற்றபடிவெவ்வேறு விதங்களில் போற்றியிருப்பதால் 'தெய்வத்தமிழ்' என்னும் வழக்கு இத் தென்மொழிக்குத் தக்கதேயாயது. இனிப் பயில்தோறும் பயில்தோறும் தன்னை நனிமிக நனிமிக நயக்குமாறு புரிவதால் கன்னித்தமிழ் என்றும் மொழியை அழைப்பதும் ஒக்கும். இத்தகைய தமிழின் அருமையோடு யாமிங்கு மேற்கொண்டுள விடயத்தின் தத்துவத்தையும், ஆற்றல் என்னுமிச் சொல்லின் அமைப்பையும்சிறிதூன்றி ஆய்ந்துபார்ப்பதால் நன்கு உணரவல்லவராகின்றோம்.

'இனி இது மிகை' எனத்தன்னை வேண்டாவகை புரிந்து கொள்ளவல்ல எதுவோ அதுவே யாதினும் உயர்ந்ததாம். மாணவனுல்தன் ஆயுள் நாளளவும் வேண்டப்படும் ஓர் ஆசிரியன், ஓதுவிக்குந் திறமை உடையவனல்ல னென்பது வெளிப்படை. "ஐய, கற்கவேண்டுவனவற்றை யானேகற்றுக்கொள்ள வல்லவனுகி நிற்கின்றேன்; என்பொருட்டு வருந்தற்க. இனி நீமிகை" என மாணுக்கனைத் தன் வயின்வந்து எத்துணைக்கு எத்துணை விரைவினில் ஒருவன் இயம்பும்படி செய்கின்றுனே அத்துணைக்கத்துணை அவன் நல்லாசிரியன் என்னும் பெயரிற் குரியவனுகின்றுன். "ஓயாது உன்னைத் தின்பானேன் மருந்தே, இனிநீமிகை" என நோயாளியைச் சொல்விக்கா மருந்தொரு மருந்தன்று. தானில்லையேல் அழிந்து விடும் குடிமக்கள் என்றபடி ஆள்கின்ற அரசும் அரசாமோ. வெறுக்கை முதல் துறக்கமீறுக வேண்டிவந்து தன்னை வழிபடுமவர்களை இறுதியில், "இறைவா, யானே நீயாகி நிற்பதுணர்ந்தேன். ஆதலின் யான்வேண்டிய அடைதற்குயாதுளது? மற்று, யானும் நீயாகில் நீ எனக்கு இனிமிகையே"

என்று உணர்ந்துரைக்கவைக்குங் காரணத்தாற்றான் கடவுளின் உயர்ந்தபொருள் ஒன்றுமில்லை என்னலா கின்றது. எல்லாப்பிறப்பிலும் மாநுடப் பிறவி சிறந்த தென்பர். ஆறறிவுயிராவதே இச்சிறப்பிற்குக் காரணம் என்றமட்டில் நின்றக்கால் உண்மையை முழுவதும் உரைத்ததாகாது. முத்திக்கிது வித்தாதலின் இனி யான் பிறத்தல் மிகை' என எண்ணற்கு ஏதுவாயமை தல்பற்றியே மனிதசன்மம் மேலாகின்றது. இப்படி யே சிறுசிறு விடயங்களிலும் பெரும்பெரும் விட யங்களிலும் அதனதனளவில் தன்னைத்தான் இன்றிய மையாமையினின்று மிகையெனுந் தன்மைக்கு மாற் றிக் கொள்பவைகளே உயர்ந்தவைகளாகின்ற பரிசு எங்கும் இவ்வுலகினில் இருக்கக்காணலாம். விழைந் தவர்க்குத் தாம் கடிதின் மிகையாகி நிற்கவல்ல பொருள்களே விழுமியன என்னும் விதி இதுவரை உரைத்தவைகளினின்று பெறலாகின்றது. வேசியும் மதுவும்போல் வெறுத்துத் தெவுட்டும்படி வந்தடை கின்ற இழிதகைப்பொருள்களை அவ்விழுமிய பொ ருள்களோடு மயங்கவேண்டா. வேண்டற்குரிய அல் லனவாயிருந்தும் மேன்மேலுந் தம்மை வேண்டும்படி தூண்டுவதால் வெறுக்கப் பெறுவன இவை. வேண் டற்பாலன வாயிருந்தும் வரவரத் தம்மை வேண்டாத வாறு விரும்பவைப்பன அவை. மருந்தருந்துமொரு நோயாளி, "இது குடித்தற்குரியதே. எனினும் இதனை யான் குடிக்க வேண்டாமை விரைவினில் நேருமாறு விரும்புகின்றேன்" என்றன்னும் மனத் தினனுவான். இதற்கெதிர் கட்குடியனோ, "இது உண்ணற் பாலதன்று; ஆயினும் யான் உண்ணும்படி நேர்ந்துவிட்டது. பாவியேன் யான் இதனாற் படுந் துயரம் பெரிது" என மதுவையுந் தன்னையும்வெறுத் துக் கொள்கின்றனன்.

இவைகளை நினைவிற்கொண்டு நாம் இனி ஆற்றல் என்னுஞ் சொல்லினது அமைப்பிற் புதைபொரு ளாய்க் கிடக்குந் தத்துவத்தை நோக்கலாம். 'ஆற்று' என்பது இச்சொல்லின் பகுதி. அதற்குப் "பொறுத் துக்கொள்," "செய்" என இருபொருள்கள்உள. ஆதலின் அப்பகுதியினடியாகப்பிறந்த 'ஆற்றல்' என்னுந் தொழிற்பெயர் 'பொறுத்துக்கொள்ளல்' 'செய்தல்' என்னும் இருபொருள்களையுடையது. திற மையுடன் செய்கின்ற செய்கையையே இச்சொல் குறிக்கவேண்டுமென்ற நியதியில்லை. 'வதுவை ஆற் றினன்' என்னும் வாக்கியத்தில் பயில்வதுபோல அது வெறுஞ்செய்கையைக் குறித்தல்கூடும். ஆத லின், செய்தல் பொறுத்தல் என்னும் இருபொருள் களையும் இணைத்துநோக்கின் வாழ்க்கைத் தத்துவ த்தில் இவையிரண்டும் ஒன்றையே உணர்த்துந் தன்மை தெரியலாகும். நாம் ஆற்றவேண்டியதெல் லாம் எய்திபதோர் நிலையை ஆற்றவேண்டியதொன்றே. இருக்கின்ற நிலையைத்தாங்கி நிற்கவேண்டியதல்லாமல் நாம் செய்யவேண்டியன ஒன்றுமில்லை என்பதுதான் இதன் பொருள். இது எளிபதன்று. சிந்தையை அடக் கியே சும்மா விருக்கின்ற திறமை எத்துணை அரிய தென்பதைத் தாயுமானவரைக் கேட்டால் அவர் கூறு வார். இந்தச் சும்மாவிருத்தல்தான் தன்னிலையைத் தாங்கியிருத்தல். 'முன்னேற்றம்' என்று இக்காலம் முழங்குவன வெல்லாம் இக்கருத்தின்படி, புரையோ டிய வீணுரைகளாதல் வேண்டும். தன்னிலையில் தங்கி யிருத்தற்குரிய முயற்சியோ சிறியதன்று. இந்த முயற் சியே ஆற்றலாகும். இவ்வாற்றல் கைவருதலே உயர் வடைதல், மற்றவெல்லாம் ஆற்றலில்லை.

ஒன்றுஞ் செய்யாமையே ஆற்றல் என்றேம். பின், அவ்வொன்றுஞ் செய்யாமலிருக்குந் திறமையைப் பெறுதற்குரியவைகளை முயல்வதும் ஆற்றலாகும். மேற்பார்வைக்கு இவை முரணுடைய மொழிகள் போல் தோன்றலாம். யாதொன்றுஞ்செய்யவேண்டாத நிலையை எய்துவதற்கு வேண்டியன வற்றையே செய்ய வேண்டுமே யொழிய, ஒன்றை விட்டொன்றைப்பற் றிக் கறங்கவைக்குங் கருமங்களைக் கைக்கொள்ள லாகா தென்பது இதன்கருத்து. ஆற்றல் என்பது எதிர்மறை ஏவல்வினையும் ஆதல் கூடும், என்பதை நினைவிற் கொள்வோமெனின் இக்கருத்து அச் சொல்லின் அமைப்பிலேயே அடங்கியிருக்கக் காண லாம். எக்கருமம் ஆற்றப்புகினும் "மீண்டு மதனைச் செய்யவேண்டாதவாறு புரிந்து கொள்" என முறை யிடுவது போல் அச்சொல் "ஆற்றல், ஆற்றல்" என்று காட்டுகின்றது. இம்முறையீட்டை உட்கொண்டு வினைகள் ஒடுங்குமாறு வாழ்க்கையில்நாம் வைகுவதே உண்மையான ஆற்றலாகும். "இனி இதனைச் செய் தல் மிகை" என்று சொல்லிவிடுவதற்குரிய செய்கை களே உயர்ந்தவை. அவைகளை மேற் கொள்பவனே ஆற்றலுடையவன். ஒருவன் உயர்வடைவதன் இலக் கணம் இது. இப்படிக்கின்றிக் கருமங்களைக் குவித் துக்கொள்ளும்வகையில்உடல்வலிகொண்டும்பொருள் பலங் கொண்டும் விவகரிப்பதால் எவரும் உயர்வடைய மாட்டார். மக்கட்பிறவிக்குஉறுவினை, வினையினி யிலை யென அறுப்பது. வினையினை வளர்ப்பதே உயர்வடை யும் ஆற்றல் என விவகரிப்பாராயின் இன்னுந் தாங்கள் விலங்குகள் என்பதையே விளக்கிக் காட்டுபவராவர். மரத்தடியில் ஒரு குரங்கு சும்மாவுட்கார்ந்திருந்தால் 'இதுமனிதனோ' வென யாரேனும் ஒருகால் எண்ணி னும் எண்ணலாம். ஆனால் அதுமரமேறத் தலைப்பட் டால் குரங்குதான் என்பது நிச்சயமாய்விடும். இன்னும்அது உயரஉயர ஏறினல் தொங்கும் வாலின் நீளமல்லால் தோற்றம்பெருமை வேறுண்டோ.

**அடுத்தவாண்டுச் சந்தாவை இரண்டொரு வாரங்களுக்குள் அன்பு கூர்ந்து எமது நண்பர்கள் அனுப்பிவைப்பார்களாயின் யாமவ் வுதவியைப்பெரிதும் பாராட்டு வோம்.**

"மானேஜர்"



# குறுந்தொகை

[909-வது பக்கத் தொடர்ச்சி]

பேயார்] 339 [குறிஞ்சி

வரைவிடைவைத்துத் தலைமகன் பிரிந்துழிப் பிரிவாற் றாது வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்திக் கூறி யது.

நறையகில் வயங்கிய நளிபுன நறும்புகை
உறையுறு மகளிர் மையிற் போகிச்
சாரற் குறவர் பாக்கத் திழிதரு
நாடன்,
மயங்குமலர்க் கோதைநன் மார்பு முயங்கல்
இனிதுமன், வாழி தோழி, நறுவிதழ்க்
குவளை யுண்கண் கலுழப்
பசலை யாகா வூங்கலங் கடையே.

(உரை). சந்தனமரமும் அகில்மரமும் செறிந்து விளங் கிய புனத்தில் (அவற்றை வெட்டிக் கொளுத்தியதால்) எழுந்த நறும்புகை மேகத்தைப்போல எழுந்து சென்று மக ளிர் தங்குதலைக் கொண்ட சாரலையுடைய குறவரூரில் இறங் கும்மலைநாடன் அவனது பல பூக்களைக் கலந்துகட்டிய மாலை யை அணிந்த நல்ல மார்பைத் தழுவி முயங்கல் இனிதே அது நேராதவிடத்து மணக்கும் இதழ்களையுடைய குவளை போன்ற மைதீற்றப்பெற்ற கண்கள் கண்ணீரைவடித்தழுது மேனியெங்கும் பசலை பரவாதிருக்கும்போது

நறை - (ஆகுபெயர்) நறுமணத்தையுடைய சந்தனம். மையின் - மேகத்தைப் போல; மை - மேகம். குறமகளிர் உறையுறு சாரற்பாக்கம், என்று கூட்டுக. நாடன்மார்பு-நாட னது மார்பு (ஆறன் தொகை); நாடனது மார்பை நீ முயங் கல், என்று கொள்ளினும் அமையும். ஆகாவூங்கு, அலங் கடை - மீமிசைச்சொல். ஆகா ஊங்கு - உண்டாகாத போது. அலங்கடை - அல்அம் கடை - அல்லாத, நேராத இடத்து. மன் - அசைநிலை.

முயங்குதல் இனிதே; ஆனல் பிரிவிடை முயங்கப் பெறுதகாலத்துப் பசலைமீதூர அழுதுவருந்தல் இன்னாது, என்றதாம்.

அம்மூவனார்] 340 [நெய்தல்

தலைமகனுக்கு இரவுக்குறி நேர்ந்த தோழி தலைமகளுக்கு அதை உணர்த்தியபோது தலைமகள் மறுத்துக் கூறியது.

காமங் கடையிற் காதலர்ப் படர்ந்து,
நாமவர்ப் புலம்பின் நம்மோ டாகி
ஒருபாற் படுதல் செல்லா தாயிடை,
அழிவி நின்ற அலர்வேர்க் கண்டல்
கழிபெயர் மருங்கி னொல்கி யோதம்
பெயர்தரப் பெயர்தந் தாங்கு
வருந்தும், தோழி, அலர் உந்தவென் னெஞ்சே.

(உரை).காமம் நம்மைக்கலக்கி வருத்தும்போது காதலரை நினைந்து அவர்பாற்சென்றும், அவரைப் பிரிந்து தனிமையுற் று நாம் வருந்தும்போது நம்மிடத்ததாகியும் இவ்வாறு, கழி முகத்தில் நின்ற பரந்த வேர்களையுடைய கண்டல் கழிநீர் பெயரும்போது முன்சாய்வதும் கடல்நீர் பெயரும்போது பின்சாய்வதும்போல, ஒருவழி நில்லாது எனது நெஞ்சம் ஊரெழும் அலரையஞ்சி வருந்தாநிற்குங்காண்.

கடைதல் - கலக்கியுடைத்தல். அழிவி - கழிமுகம். கண் டல் - தாழை அல்லது கண்டல்மரம். கழி - கழியின் நீர். பெயர்மருங்கின்- பெயருமிடத்து. ஒல்கி-வளைந்து, சாய்ந்து. ஓதம் - கடல்நீர். 'அவருந்த', 'அவாருந்த' என்பன பாட பேதம்.

மிளைகிழான் நல்வேட்டனார்] 341 [முல்லை

குறித்த பருவவரவின்கண் தலைவன் வாராமையால் ஆற் றாது வேறுபடுவளென்று கவன்ற தோழிக்குக் கிழத்தி சொல்லியது.

பல்லி படீஇய பசுநனைக் குரவம்
பொரிப்பூம் புன்கொடு பொழிலணிக்கொளாஅச்
சினையினி தாகிய காலையும், காதலர்
பேணா ராயினும் பெரியோர் நெஞ்சத்துக்
கண்ணிய வாண்மை கடவ தன்றென
வலிய நெஞ்சம் வலிப்ப
வாழ்வேன், தோழி, என் வன்க ணானே.

(உரை). பொழில்கள், பசிய அரும்புகளையுடைய குரா மரத்தாலும் பொரியைப்போன்ற பூக்களையுடைய புங்க மரத்தாலும் அழகைக்கொண்டு பல்லியிருந்தொலிக்குஞ் சினையால் இனியதான இக்(கார்) காலத்தும் காதலர் (தாமு ரைத்த மொழியையும் நம்மையும்)காக்கவாராராயினும், பெரி யோர் தமது உள்ளத்திற் கருதிய ஆண்மைத்தொழில் திறம் பக் கடவதொன்று அன்றென்று எனது வலிய நெஞ்சம் வற் புறுத்தலால் அஞ்சாமையோடு நான் இன்னும் உயிர் தரித்து வாழ்வேன் ஆயினேன்.

படீஇய - ஒலித்த. வன்கண் - அஞ்சாமை.

காவிரிப்பூம் பட்டி னத்துக் கந்தரத்தனார் } 342 { குறிஞ்சி

தலைமகள் இற்செறிப்புற்றதைத் தோழியால் உணர்ந்த பின்னும் வரைந்துகோடலைத் தெளியாது இரவுக்குறிநயந்து வந்த தலைமகனைத் தோழி நெருங்கிக்கூறியது.

கலைகை தொட்ட கமழ்சுளைப் பெரும்பழம்
காவல் மறந்த கானவன் ஞாங்கர்க்
கடியுடை மரந்தொறும் படுவலை மாட்டும்
குன்ற நாட, தகுமோ, பைஞ்சுனைக்
குவளைத் தண்டழை யிவளீண்டு வருந்த
நயந்தோர் புன்கண் டீர்க்கும்
பயந்தலைப் படாஅப் பண்பினை யெனினே.

OF THE 19 FE MA

(உரை). முசுக்கலைகள் கையால் தோண்டியெடுத்துண் ணும் மணம்பொருந்திய சுளைகளையுடைய பெரிய (பலா) பழங்களைத் தானேயிருந்து காக்கமுடியாத மறவன்பக்கத் திலே (பழங்களின்) மிகுதியையுடைய மரங்கள்தோறும் (குரங்குகள் சிக்கும்படி) வலைகளைக் கட்டிவைக்கும் குன்ற நாடா, பசிய சுனையிலுள்ள குவளைமுதலியவற்றாற் பின் னிய குளிர்ந்த தழையுடையை அணிந்த இவள் இங்கே மிகவும் வருந்தக்கண்டார் 'நீ விரும்பியுற்றவருடைய துன் பத்தைத் தீர்க்கும் நற்பயன்படாத குணத்தினை' என்று உன்னைச்சொன்னல், அது உனது பெருமைக்குத் தகுமோ? (தகாதுகாண்.)

தொட்ட - குடைந்த, தோண்டிய. 'மறைந்த' என்பது, செய்யமுடியாத என்ற பொருளில் வந்தது. ஞாங்கர் - பக் கம். கடி - மிகுதி.

இறைச்சி:—'கலைகைதொட்ட........... படுவலை மாட் டும்' என்றதால், தாமில்லாத காலத்தில் ஆடவரணுகித் தலைமகளின் நலத்தை உண்ணுமற்பொருட்டுத் தமையன் மார் வழியெங்கும் வலைபோக்கிப் பொறிவைத்திட்டாராத லின் இரவின் வருதல் ஏதமுடைத்து; வரைந்து கோடலே செயற்பாலது, என்று தோழி குறித்தவாறும்.

ஈழத்துப் பூதன்தேவனார்] 343 [பாலை

*தலைமகளை உடன்கொண்டுபோவதற்குத் தலைமகனை உடம்படுவித்த தோழி தலைமகள் அவ்வுடன்போக்கை நயப்பக் கூறியது.*

நினையாய், வாழி தோழி, நனைகவுள்
அண்ணல் யானை அணிமுகம் பாய்ந்தென
மிகுவ லிரும்புலிப் பகுவா யேற்றை
வெண்கோடு செம்மறுக் கொளீஇய விடர்முகைக்
கோடை யொற்றிய கருங்கால் வேங்கை
வாடுபூஞ் சினையிற் கிடக்கும்
உயர்வரை நாடனொடு பெயரு மாறே.

(உரை). *மிக்க வலியையும் அங்காந்தவாயையுமுடைய பெரிய ஆண்புலி மதநீரால் நனைந்த கன்னத்தையுடைய சிறந்த யானையின் அழகிய முகத்திலே பாய்தலும், அதன் வெண்மையான தந்தங்கள் செவந்த குருதிக்கறையைக் கொள்ளும்படி தனது முகத்திற் பாய்ந்து புண்படுத்திய தால் வருந்தி, மேல்காற்று அடித்துச் சாய்த்த கருங்கால் வேங்கையின் வாடிய பூக்களையுடைய கிளையைப் போலக் குகையினகத்தே படுத்துக்கிடக்கும் மலைநாடனுடன் நம் மூரைவிட்டுப் போதலை, தோழீ, நீ நினைப்பாயாக.*

*முகம் பாய்ந்தென - முகத்தில் (புலி) பாய்தலும். கொளீஇய-கொள்ளும்படி. 'பாய்ந்தென'என்பதை ஏற்றைப் பாய்ந்தென, வெண்கோடு பாய்ந்தென,என்றுஈரிடத்துங்கூட்டுக. விடர் முகை - விடராகிய முகை. கோடை - மேல்காற்று. பெயருமாற்றை நினையாய், எனக் கூட்டுக.*

---

குறுங்குடி மருதனார்] 344 [முல்லை

*பிரிவிடைத் தன்னை வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.*

நோற்றோர் மன்ற, தோழி, தண்ணெனத்
தூற்றுந் திவலைப் பனிக்கடுந் திங்கள்
புலம்பயி ரருந்தி அண்ண லேற்றொடு
நிலந்தூங் கணைல வீங்குமுலைச் செருத்தல்
பால்வார் குழவி யானி னிரையிறந்
தூர்வயிற் பெயரும் புன்கண் மாலை
அரும்பெறற் பொருட்பிணிப் போகிப்
பிரிந்துறை காதலர் வரக்காண் போரே.

(உரை). *தோழீ, குளிருண்டாகும்படி பனித்திவலைகளைத் தூற்றும் கடும்பனிமாதத்தில், அயற்புலத்திடத்துப் பயிர்களை மேய்ந்து (வழியிலுள்ள புற்களை மேய்வதற்கு) தரைபடக் குனிந்து தொங்கிய கீழ்வாயையும், பால்சுரந்து விம்மிய மடியையும், குடித்த பால் கடைவாயினின்று வழியும் கன்றுகளையுமுடைய பசுக்கூட்டம் சிறந்த எருதோடும் மேயுமிடத்தை விட்டகன்று ஊரிடத்தே திரும்பும் துன்பத்தைத்தரும் மாலைநேரத்தில் பெறுதற்கரிய பொருளாசையாற் பிணிப்புண்டு தம்மைத் துறந்துபோய் அன்னிய நாட்டில் தங்கலுற்ற காதலர் மீண்டுவரக் கண்டதலைவியர், நிச்சயமாக, (மிகவும்) தவம்புரிந்தவரே ஆவர்.*

*பனிக்கடுந்திங்கள் - முன்பனிக்காலமாகிய மார்கழி அல்லது தைமாதம். அணல் - கீழ்வாய், மோவாய். முலைச் செருத்தல் - முலையாகிய செருத்தல்; இருபெயரொட்டு. முலை செருத்தல் - பசுவின் மடி. ஆனினிரை - ஆன்நிரை, பசுக்கூட்டம். 'ஆனின்நிரை' என்ற பாடம் இனிது பொருள் பயவாமை காண்க.*

---

அண்டர்மகன் குறுவழுதியார்] 345 [நெய்தல்

*பகற்குறி வந்தொழுகுந் தலைமகனைத் தோழி இனி இரவின்கண் வருக என்றுசொல்லிப் பகற்குறி விலக்கியது.*

இழையணிந் தியல்வருங் கொடிஞ்சி நெடுந்தேர்
வரைமருள் நெடுமணற் றவிர்த்த நிரையசை இத்
தங்கினி ராயிற் றவறோ, தகைய
தழைதா ழல்கு லிவள்புலம் பகலத்
தாழை தைஇய தயங்குதிரைக் கொடுங்கழி
இழுமென வொலிக்கு மாங்கண்
பெருநீர் வேலியெஞ் சிறுநல் லூரே.

(உரை). *அழகுவாய்ந்த தழையுடையை அணிந்த அரையினையுடைய இவள்தன் வருத்தம் நீங்குமாறு, தாழைச்செடிகள் கோலஞ்செய்த கொடுங் கழியினிடத்தே அசையும் அலைகள் மெல்லென ஒலிக்கும் கடற்கரையின் அயலிடத்தேயுள்ள காவலையுடைய எமது நல்ல சிற்றூரில், கொடி மாலை முதலிய அணிகளையணிந்து அழகுவாய்ந்த கொடிஞ்சியையுடைய நெடுந்தேரை, மலையென்று மயங்கத்தக்க மணல்மேடுகளைக் கடத்தி இழுத்துவந்த குதிரைகளை இளைப்பாற்றுவித்து, இராத்தங்கினீராயின், அது குற்றமாகுமோ?*

*இழை - தேருக்கு அலங்காரமாகப் பூட்டும் அணிகலன்கள். இயல்-அழகு. நிரை-வரிசையாகக் கட்டிய குதிரைகள். அசைஇயி - இளைப்பாற்றி. புலம்பு அகல -தனிமை அல்லது துன்பம் நீங்க. தயங்கு - உலவும், அசையும். இழுமென - இழுமென்னும் சத்தத்தோடு, என்றுமாம்; இழும் - ஓரனுகரணவொலி. பெருநீர்-கடல். வேலி - காவல். ஊர்-ஊரின்கண் தங்கினீராயின் எனக் கூட்டுக.*

---

வாயிலிளங்கண்ணனார்] 346 [குறிஞ்சி

*தலைமகனுக்கு இரவுக்குறி நேர்ந்த தோழி தலைமகள் அதனை நயக்குமாறு கூறியது.*

நாகுபிடி நயந்த முளைக்கோட் டிளங்களிறு
குன்ற நண்ணிக் குறவ ரார்ப்ப
மன்றம் போழு நாடன், தோழி,
சுனைப்பூங் குவளைத் தொடலை தந்தும்,
தினைப்புன மருங்கிற் படுகிளி யோப்பியும்
காலை வந்து மாலைப் பொழுதின்
நல்லக நயந்துதான் உயங்கிச்
சொல்லவு மாகா தஃகி யோனே.

(உரை). *இளம் பிடியைவிரும்பிய முளைபோன்ற கொம்பையுடைய களிற்றியானை குன்றுகளையணுகிக் குறவர்கள் ஆர்ப்பெடுக்க தோட்டங்களின் நடுவிலுள்ள மரங்களைப் பிளக்கும் மலைநாடன், தோழீ, காலையில் வந்து சுனையிலுள்ள குவளைப்பூவாற் கட்டிய மாலைகளைத் தந்தும் தினைப் புனத்தில் வந்து விழும் கிளிகளையோட்டியும் தங்கியிருந்து அந்திநேரத்தில் நல்ல இன்பத்தை விரும்பி அது கிடைக்கப் பெறாமையால் மனம்வருந்தி வாயால் ஒன்றுஞ் சொல்ல மாட்டாமல் மெலிந்து வாடி(வறிதே) மீள்வான். இவற்றை நீ உணர்ந்து அதனைப் பரிகரிப்பாயாக.*

*அகம் - இன்பம்; ஆகம் - மார்பு; அதாவது தலைமகளின் நல்ல மார்பை விரும்பி, என்றுமாம். அஃகி - உடல் மெலிந்து, சுருங்கி.*

*'முனைக்கோட்டிளங்களிறு', 'தான் மயங்கி' என்பன பாடபேதம்.*

---

காவிரிப்பூம்பட்டினத்துச் சேந்தன் கண்ணனார் } 347 { பாலை

*பொருளீட்டற்கண் தன்னை வலிக்கும் நெஞ்சினுக்குத் தலைமகன் சொல்லிச் செலவழுங்கியது.*

மல்குசுனைப் புலர்ந்த நல்கூர் சுரமுதல்
குமரி வாகைக் கோல்லுடை நறுவீ
மடமாத் தோகைக் குடுமியிற் றோன்றும்
கான நீளிடைத் தானும் நம்மொ
டொன்றுமணஞ் செய்தன ளிவளெனின்
நன்றே, நெஞ்சம், நயந்தநின் றுணிவே.



(உரை). *நீர்நிறைந்த சுனைகள் நீரற்றுப் புலர்ந்து வறுமையுற்ற சுரத்தில், இளம்வாகையின் நல்ல மலர்கள் இளமைவாய்ந்த கரிய மயிலின் உச்சிக்கொண்டையைப் போலத் தோன்றும் கானத்தின் நீண்டவழியில் நம்முடன் கூடி அவளும் வந்தனளெனின், நெஞ்சே, நீ விரும்பித் துணிந்த பொருள்வயிற்பிரிவு நல்லதாகும். (அவ்வாறு அவள் உடன்வருதல் கூடாமையின் நமது செலவை நாம் தவிர்வோமாக.)*

*நல்கூர் - நீரும் நிழலும் இலவாகிய. சுரமுதல் - 'முதல்' ஏழாம்வேற்றுமையுருபு. 'கொல்லுடை'என்பதின் பொருள் விளங்கவில்லை. தோகை - மயில். மணஞ்செய்தல் - கலந்து உடன்வருதல். நெஞ்சம் - அண்மைவிளி.*

---

மாவளத்தார்] 348 [பாலை

*தலைமகன் பிரியலுற்றதைப் பல குறிப்பாலுணர்ந்து மனங்கலங்கிக் கவன்ற தலைவியைத் தோழி 'நீ எண்ணுமாறு அவர் உன்னைப் பிரிந்து செல்லார்; செல்லினும் இடைச்சுரத்தே உன்னை நினைவுறுத்தத் தருவன கண்டு மேற்செல்லாது மீள்வர்' என்று சொல்லித் தேற்றியது.*

தாமே செல்ப வாயிற் கானத்துப்
புலந்தேர் யானைக் கோட்டிடை யொழிந்த
சிறுவீ முல்லை கொம்பிற் றூஅய்
இதழழிந் தூறுங் கண்பனி மதரெழிற்
பூணக வன்முலை நனைத்தலுங்
காணார் கொல்லோ, மாணிழை, நமரே.

(உரை). *சிறந்த ஆபரணங்களை அணிந்தவளே, நந் தலைவர் தாமே தனித்துச் செல்வாராயின் தாம்செல்லுங் கானத்தில் மரக்கிளையின்மீது படர்ந்த முல்லைக்கொடியின் சிறு மலர்கள் இதழ்சிதைந்து ஒழுக்கிய தேன் கீழே உணவைத் தேடி அங்குவந்த யானையின் கொம்பின்மீது விழுதலைக்கண்டதும்,அதைப்போலத் தனதுபிரிவால் தனிமையுற்று வருந்தும் உனது கண்ணீர் மதர்த்த அழகினையுடைய பூண்களையணிந்த, சூதாட்டக் காயையொத்த முலைகளை நனைத்தலை நினைந்து (உடனே மீண்டு) வாராமல் இருப்பர்கொல்லோ?*

*கோடு - யானையின் தந்தம். கொம்பு - மரக்கிளை. ஊறு-உறுதல், பொருந்தல், விழுதல். வல் - சூதாட்டக்காய். ஊறும் நனைத்தலும் இரண்டும் இரண்டாம் வேற்றுமைத் தொகை; உறுதலையும், நனைத்தலையும் காணார் கொல்லோ, என்று கூட்டுக. காணுதலாவது, முல்லைப்பூவின் தேன் யானையின் கொம்பின்மீது விழுதலைக் கண்ணாற் காணுதல், தலைவியின் கண்ணீர் முலையின்மீது விழுதலை மனத்தாற் காணுதல், அதாவது நினைத்தல். மாதர்முலைக்கு யானையின் கொம்பை உவமையாகக் கூறும் மரபுபற்றி, அது இதனை நினைப்பூட்டும் என்றார் என்க. மாணிழை - அன்மொழித்தொகை, விளி.*

---

சாத்தனார்] 349 [மருதம்

*வரைந்துகொள்ளாது ஒருவழித்தணந்துறைந்து மீண்டு வந்த தலைமகன் கேட்குமாற்றான் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.*

அரும்பவி ழணிமலர் சிதையமீ னருந்தும்
தடங்க ணாரை யிருக்கு மெக்கர்த்
தண்ணந் துறைவற் றொடுத்து நந்நலம்
கொள்வா மென்றி. தோழி; கொள்வாம்,
இடுக்க ணஞ்சி யிரந்தோர் வேண்டிய
கொடுத்தவை தாவெனச் சொல்லினும்
இன்னா தே;நம் மின்னுயி ரிழந்தே.

(உரை). *தோழீ, அரும்புகள் தளையவிழ்ந்த அழகிய மலர்களைச் சிதைத்துக் கழியிடத்து மீன்களைப் பிடித்துண்ணும் அகன்ற கண்களையுடைய நாரைகள் உட்கார்ந்திருக்கும் மணல்மேடுகளையுடைய குளிர்ந்த அழகிய துறைவனைப் பற்றிக்கொண்டு, அவன் நம்மை வஞ்சித்துக் கவர்ந்த நலங்களையெல்லாம் அவனிடமிருந்து திரும்பவும் வாங்கிக்கொள்வாம் என்று நீ சொல்லுகிறாய். துன்பத்தையஞ்சி இரந்து வந்தவர்க்கு அவர் விரும்பியதை முன்னர்க் கொடுத்துப் பின்தி அதைத் திருப்பிக்கொடு என்று கேட்பது மிகவும் துன்பகரமானது. ஆதலால், நமதினிய உயிரையிழந்து மறுபிறப்பிலேனும் அவனையே கணவனாகப்பெற்று இப்பொழுதிழந்த நலத்தை மீட்டும் பெறுவாம். (அதுவே நலமென்று நான் நினைக்கிறேன்).*

*கொடுத்தவை தாவெனல் இன்னாது; உயிரிழந்து நந்நலம் கொள்வாம், என்று கூட்டுக.*

*உள்ளுறை:—மலர்சிதைய மீனையருந்தி எக்கர் மீதிருக்கும் நாரையைப்போலத் தலைவனும் தனது மெய்ந்நலன் சிதையுமாறு இன்பநுகர்ந்துவிட்டுக் கவலையின்றி அவனூரின்கண் உறைகின்றான் என்றதாம்.*

---

ஆலத்தூர் கிழார்] 350 [பாலை

*முந்திப் பிரிவுநேர்ந்த தலைமகள் பிந்தித் தலைமகனது பிரிவிடை வேறுபட்டாளைத் தோழி வற்புறுத்திக் கூறியது.*

அம்ம, வாழி தோழி, முன்னின்று
பனிக்கடுங் குன்றஞ் செல்லா தீமெனச்
சொல்லின மாயிற் செல்லார் கொல்லோ,
ஆற்றய லிருந்த இருந்தோட் டஞ்சிறை
நெடுங்காற் கணத்துள் ஆளறி வுறீஇ
ஆறுசெல் வம்பலர் படைதலை பெயர்க்கும்
மலையுடைக் கான நீந்தி
நிலையாப் பொருட்பிணிப் பிரிந்திசி னோரே.

(உரை). *தோழீ, நான் சொல்லுமிதனைக் கேட்டு நீஆற்றியிருப்பாயாக. வழியின் பக்கத்திலிருந்த அழகிய சிறகையும் நீண்ட காலையுமுடைய பறவைகளின் பெருந்தொகுதியில் 'ஆட்காட்டி' யென்னும் பறவை மனிதர் வருதலைக் கூவியறிவித்து வழிப்போவாராகிய வேற்றுப்புலத்தார் தலையை (மறவரம்பால்) துணியும்படி செய்யும் மலைகளடர்ந்த காட்டைக் கடந்து, நிலைபேறில்லாத பொருளாசையாற் பிணிப்புண்டு நம்மை விட்டுப் பிரிந்துசென்ற தலைவர், தாம் போகலுற்றகாலை நாம் எதிர்நின்று 'நடுங்கத்தக்க அச்சத்தைத் தரும் குன்றுகளையுடைய காட்டிடைச் செல்லாதீர்' என்று தடுத்துச் சொல்லியிருந்தால் செல்லாதிருந்தாலும் இருக்கலாம். (முன்பு போவதற்கு அனுமதி தந்து இப்பொழுது வருந்துவதாற் பயனென்னை?)*

*பனி - நடுக்கம்; நடுக்கத்தை யுண்டாக்கும் அச்சத்துக்கு ஆகுபெயர். செல்லாதீம்-செல்லாதீர். இருந்தோட்டுக்கணம் - தோடாகியகணம்; இருபெயரொட்டு. கணத்துள்'ஆட்காட்டி' யென்று ஒரு சொல் வருவிக்க. வம்பலர் தலையைப் படைபெயர்க்கும் என்று மாற்றி உருபு விரித்துக்கொள்க. 'பெயர்க்கும்' பெயர்விக்கும், பெயரும்படி செய்யும்; ஆட்காட்டிப்பறவை 'வம்பலர் வருதலை' அறிவிக்க, மறவர் அவர் தலையை அம்பாற் கொய்வர் என்க.*

---

அம்மூவனார்] 351 [நெய்தல்

*தலைமகன்தமர் வரைவொடு வந்தவழித் தலைமகளின் தமர் வரைவுநேர்ந்ததைத் தோழி தலைமகளுக்கு அறிவித்தது.*

வளையோ யுவந்திசின்; விரவுங் கொடுந்தாள்
அளைவா ழலவன் கூருகிர் வரித்த
ஈர்மண லீர்நெறி சிதைய இழுமென
உருமிசைப் புணரி யுடைதருந் துறைவற்
குரிமை செப்பினர் நமரே; விரியலர்ப்
புன்னை யோங்கிய புலாலஞ் சேரி

இன்னகை யாயத் தாரோ
டின்னும் அற்றோ,இவ் வழுங்க லூரே?

(உரை). வளைந்த கால்களையுடைய, வளையில் வாழும் இயல்பினதாகிய நண்டு தனது கூரிய நகத்தாற் ஈரமான மணலிலே கீறிய ஈரமான கோடுகள் அழியும்படி இடியின் முழக்கத்தைக்கொண்ட கடலின் அலைகள் 'இழும்' என்று கரையில் விழுந்து உடையுந் துறைவனுக்கு உன்னை உனது தமர் உரிமையாக்க ஒப்பி, அவ்வாறே சொல்லிவிட்டனர். வளையலை அணிந்தவளே, நீ இனி மகிழ்ந்திடுவாய். விரிந்த மலர்களையுடைய புன்னைமரங்க ளோங்கிய புலால்நாற்றம் நீங்காத சேரியிலுள்ள இனிய நகையோடுகூடிய மகளிராயத்தோடு இவ்வாரவாரத்தைச் செய்யு மூர் முன்போல இப்பொழுதும் பகைமையைக் கொண்டுளதோ?

உரும் இசை - இடியின் முழக்கம். உரிமை - மனைவியாகும் உரிமை. அற்றோ-அலர் தூற்றி வருத்துந் தன்மையதோ.

உள்ளுறை:—அலவனிழைத்த சிறுகாற்கோடுகளை அலை பரந்து அழித்தாற்போலத் துறைவனும், பண்டைக்காலத்தில் தமது ஆயத்தாரோடு தலைமகளுந் தானும் கடற்கரையிலிழைத்த சிற்றில்களைச் சிதைத்ததுமன்றிப் பிரிந்தியும் களவுக்கூட்டத்திலே தலைநின்று வரைந்துகொள்ளாது தலைமகளின் பெய்ந்நலன்களையும் ஊணுறக்கங்களையும் ஒழித்திட்டான் என்றதாம்.

கடியலூர் உருத்திரங் கண்ணனார்] 352 [முல்லை

தலைவனது பிரிவிடை மாலையம்பொழுது வரக்கண்டு வருந்திமெலிந்த தலைவி தோழிக்குச் சொல்லியது.

நெடுநீ ராம்ப லடைப்புறத் தன்ன
கொடுமென் சிறைய கூருகிர்ப் பறவை
அகலிலைப் பலவின் சாரல் முன்னிப்
பகலுறை முதுமரம் புலம்பப் போகுஞ்
சிறுபுன் மாலை யுண்மை
அறிவேன், தோழி,அவற் காணு வூங்கே.

(உரை) தோழீ, நீண்ட தாளையுடைய நீராம்பலின் இலையினது புறத்தைப்போன்ற வளைந்த மெல்லிய சிறகுகளையும் கூர்மையான நகங்களையுமுடைய பறவையாகிய வௌவால் பகற்காலத்தில் தான் உறையும் (பொந்துகளையுடைய) முதிர்ந்தமரங்கள் தனிமையுறும்படி அவற்றினீங்கி அகன்ற இலைகளோடுகூடிய பலாமரங்களையுடைய மலைச்சாரலை நோக்கிச் செல்லும் சிறிய புன்மையான மாலைக்காலம் என்பதொன்று உண்டென்பதை நான் காதலரைக் காணப்பெறாத காலத்தேதான் அறிவேன்.

அடை - இலை. 'மாலையுண்மை அறிவேன்' என்றது தனிமையுற்ற தனக்கு அவ்வந்திநேரம் விரகவேதனையை உண்டாக்குவதால்.

கடியலூர் உருத்திரங் கண்ணனார்] 353 [குறிஞ்சி

வரைவிடைவைத்துத் தலைமகன் பிரிந்துழிப் பிரிவாற்றுத் தலைமகள் தோழிக்கு வருந்திக் கூறியது.

ஆர்கலி வெற்பன் மார்பு புணையாகக்
கோடுயர் நெடுவரைக் கவாஅற் பகலே
பாடின் னருவி யாடுதல் இனிதே;
நிரையிதழ் பொருந்தாக் கண்ணோ டிரவிற்
பஞ்சி வெண்டிரிச் செஞ்சுட ரில்லிற்
பின்னுவீழ் சிறுபுறந் தழீஇ
அன்னை முயங்கத் துயிலின் னாதே.

(உரை). பகற்பொழுதில், ஆரவாரத்தையுடைய மலை நாடுருவிய தலைமகனது மார்பைப் புணையாகக்கொண்டு கொடுமுடிகளுயர்ந்த நீண்ட மலையினிடத்துள்ள இனிய வொலியோடு கூடிய அருவியில் புனல் விளையாட்டுப் புரிந்தது இனிதாக இருந்தது; ஆனால் இரவில், வெண்மையான பஞ்சுத்திரியிலேற்றிய செஞ்சுடர்விளக்கையுடைய நல்ல மனையின்கண் பின்னியமயிர் தொங்கும் பிடரியைத்தழுவிச் செவிலித்தாய்கட்டியணைத்து உடன் துயில இமைகள்ஒன்றோடொன்று பொருந்தாத கண்ணோடு படுத்திருத்தல் இன்னாதாய் இருக்கின்றது.இதற்கு நான் என்செய்கேன் தோழி?

வரைக்கவான்; கவான் ஏழனுருபு. பாடு - ஒலி, ஓசை. இன் - இனிய. பின்னு - மயிர்ப்பின்னல், ஜடை; பின்னு- உகரம் பெற்று வந்த 'பின்'என்னுந் தொழிற்பெயர் (தொல்- எழுத்ததி - புள்ளிமயங்-50). சிறுபுறம்-பிடரி; பின்கழுத்து. துயில் - படுக்கையிற் படுத்திருத்தல்.

இப்பாட்டை நச்சினார்க்கினியர் தோழியின் கூற்றாக்கி, இரவுக்குறி வந்த தலைமகன் சிறைப்புறமாகப் பகற்குறி நேர்வான்போல் இரவுக்காப்பு மிகுதி கூறியது; பாடின்னருவி யாடுதல் என்றாள் அதன்கண் உதவினான் என்பது பற்றி, என்பர்: (தொல் - பொருளதி - களவியல் 23-ம் சூத்திர வுரை).

கயத்தூர் கிழார்] 354 [மருதம்

பரத்தையிற் பிரிந்து வந்து, தலைவியினூடலைத் தணித்தற்குத் தன்னை வாயிலாக வேண்டிய தலைமகனுக்குத் தோழி வாயில் மறுத்துரைத்தது.

நீர்நீ டாடிற் கண்ணுஞ் சிவக்கும்;
ஆர்ந்தோர் வாயிற் றேனும் புளிக்கும்;
தணந்தனை யாயினெம் மில்லுய்த்துக் கொடுமோ,
அந்தண் பொய்கை எந்தை, எம்மூர்க்
கடும்பாம்பு வழங்குந் தெருவில்
நடுங்கஞ ரெவ்வங் களைந்த வெம்மே.

(உரை). அழகிய குளிர்ந்த பொய்கைகளையுடைய ஊருக்குத் தலைவனான எந்தையே; நெடுநாள் அடுத்தடுத்து நீராடினால்கண்கள் செவந்துவிடும்; அன்றியும் பலநாளும் இன்பம் நுகர்ந்த மகளிர்தம் வாயிடத்துத் தேன்போன் றினிய நீரும் நாளடைவில் புளிக்கலாகும்; (அதனால் இதுகாறும் நீ கூடிக்களித்த பரத்தையரைத்) துறந்து இப்பொழுது இங்கு வந்தாய்போலும். அவ்வாறாயின் நாமதற்கொல்லோம் முன்னாள் எம்மூரில் கொடிய பாம்புகள் வழங்குந் தெருவில் நடுக்கத்தைத் தரத்தக்க துன்பத்தைப் போக்கிக்கொண்ட எம்மை எமது வீட்டினகத்துக் கொண்டுபோய்விட்டு நீ விரும்பிய பரத்தையர் மனைக்கே போவாயாக.

நடுங்கு அஞர் - நடுங்குதற்குக்காரணமான துன்பம்.

இறைச்சி:—'கடும் பாம்பு வழங்குந் தெருவில் நடுங்கஞர் களைந்தது' என்றது முன்பு ஊரிலுள்ளார் தூற்றிய அலராலுண்டான துன்பத்தைப் போக்கித் தலைமகளை வரைந்து கொண்டதைக் குறித்தவாறும்.

கபிலர்] 355 [குறிஞ்சி

தலைமகனுக்கு இரவுக்குறி நேர்ந்த தோழி அவன்இரவின் வருதலின் ஏதங்குறித்து அவனிடம் தன்னைநொந்து கூறியது.

பெயல்கான் மறைத்தலின் விசும்புகா ணலரே;
நீர்பரந் தொழுகலின் நிலங்கா ணலரே;
எல்லை சேறலின் இருள்பெரிது பட்டன்று;
பல்லோர் துஞ்சும் பானாட் கங்குல்
யாங்குவந் தனையோ, ஓங்கல் வெற்ப?
வேங்கை கமழுஞ் சிறுகுடி
யாங்கறிந் தனையோ? நோகோ யானே?

(உரை). உயர்ந்தமலைநாடா,மழைக்கால்கள் மறைத்தலால் விசும்பையும் எவரும் காணமாட்டார்; மழைநீர் எங்கும் பரந்



தொழுகி மறைத்தலால் நிலத்தையும் காணமாட்டார்; பகல் நீங்கியதால் இருளும் செறிந்து மிகுதியாயிற்று; யாவருந் துயிலும் நடுராத்திரியில் எவ்வாறு நீ வந்தாய்? வேங்கை மலர்களின் மணங்கமழும் எமது சிறுகுடிக்கு எவ்வாறு நீ வழியையறிந்து வந்தாய்? (இத்துன்பங்களுக்கு உன்னை ஆளாக்கிய) நான் மிகவும் வருந்துகின்றேன்.

எல்லை - பகல். சேறல் - செல்தல்.

கயமனார்] 356 [பாலை

தம்மை நீத்துத் தலைமகனுடன் தலைமகள் போனதை உணர்ந்த செவிலித்தாய் தனக்குத்தானே சொல்லியது.

நிழலான் றவிந்த நீரி லாரிடைக்
கழலோன் காப்பக் கடுகுபு போகி
அறுசுனை மருங்கின் மறுகுபு வெந்த
எவ்வங் கலுழி தவ்வெனக் குடித்து
யாங்குவல் லுநள்கொல் தானே, ஏந்திய
செம்பொற் புனைகலத் தம்பொரிக் கலந்த
பாலும் பலவென வுண்ணாள்
கோலமை குறுந்தொடித் தளிரன் னோளே.

(உரை). செம்பொன்னாலாகிய அணிகலன்களையும், திரட்சிவாய்ந்த சிறு வளையல்களையும் அணிந்த தளிரைப்போல மெல்லிய மேனியையுடைய என்மகள் (சூரியன் வெப்பத்தால்) பொரிந்த பொரியைப்போல வழியெங்கும் பரந்த பருக்கைக்கற்கள் பலவென்பதையும் எண்ணாது, நிழல் சற்றுமில்லாத நீரற்ற அரிய காட்டுவழியில் கழலையணிந்த தலைமகன் தன்னைக்காத்து உடன்செல்ல விரைந்து நடந்து கலங்கி வெப்பத்தாலுண்டாகிய வருத்தத்தை நீர் வறண்ட சுனையிலுள்ள கலங்கல்நீரைக் குடித்துப் போக்கிச்செல்ல எங்ஙனம் வல்லளாயினளோ?

ஆன்றவிந்த - (விகாரம்) ஆன்ற அவிந்த; மிகவும் அவிந்த: தவ்வென -கெடும்படி. எவ்வம் தவ்வெனக் கலுழி குடித்து, என மாற்றுக. கலுழி - கலங்கனீர். புனைகலத்து, குறுந்தொடித் தளிரன்னோள் எனக்கூட்டுக.

'காலுழித்தவ்வென' என்றுமோர் பாடம் காணப்படுகின்றது; ஆனால் அதன்பொருள் தெளியக்கூடவில்லை.

கபிலர்] 357 [குறிஞ்சி

வரையாது களவினிலொழுகுந் தலைமகன் இரவுக்குறி வந்து, கேட்கும் அண்மையனாக, அவனுக்கு உணர்த்தல் வேண்டித் தலைமகளுக்கு உரைப்பாள்போலத் தோழி கூறியது.

முனிபட குழந்த, பாடி லுண்கட்
பனிகால் போழ்ந்து பணையெழில் ஞெகிழ்தோள்
மெல்லிய வாகலின் மேவரத் திரண்டு
நல்ல வென்னுஞ் சொல்லை மன்னிய,
ஏனலஞ் சிறுதினை காக்குஞ் சேணோன்
ஞெகிழியிற் பெயர்ந்த நெடுநல் யானை
மீன்படு சுடரொளி வெரூஉம்
வான்றோய் வெற்பன் மணவா வூங்கே.

(உரை). தலைமகன் உன்னை வெறுத்தகன்றதைச்சதா நினைந்து வருந்துவதால் துயில்கொள்ளாத மையுண்டகண்கள் சொரியும் கண்ணீரொழுக்காற் சிதையுற்று மூங்கிலைப் போன்ற பழைய அழகை இப்பொழுதிழந்த உனது தோள்கள், சிறிய தினைப்புனத்தைக் காக்கும் பரண்மீது தங்கிய குறவனது கொள்ளியையஞ்சிப் பெயர்ந்த உயர்ந்த நல்ல யானை (ஆகாயத்திலுள்ள) நட்சத்திரங்களிடத்துண்டான ஒளியைக்கண்டு(அவையும் கொள்ளியென) வெருவும் விண்ணளவுயர்ந்த மலைநாடன் உன்னைக் (களவினிற் கலந்து) கூடியதன்முன்னர் மெல்லியவாகலின் யாவரும் விரும்பத்தக்கனவாய்த் திரண்டு அழகிற்சிறந்து விளங்கினவென்ற புகழைப் பொருந்தியிருந்தன.

படர் - இடைவிடாது நினைத்தல். பாடு - படுதல்; மூடுதல், துயிறல். கட்பனி - கண்ணீர். பணை - மூங்கில். மேவர - மேவுதல் (விரும்புதல்) வர. தினை - (ஆகுபெயர்) தினைப்புனம்; 'ஏனலந்தினை' யென இருபெயரொட்டாகலுமாம். சேணோன் - உயர்ந்த மலைமேல் வாழும், அல்லது பரண்மீதிருந்து தினைப்புனங்காக்கும் குறவன். ஞெகிழி - கொள்ளிடக்கட்டை. மீன் - விண்மீன்; நட்சத்திரம். மணத்தல் - கூடுதல், முயங்குதல்.

கோற்றனார்] 358 [முல்லை

தலைவன்து பிரிவிடை வருந்திய தலைவியைத் தோழி அவன் வருவதாகக் குறித்த பருவத்தின் வரவைக்காட்டி ஆற்றுவித்தது.

வீங்கிழை நெகிழ விம்மி யீங்கே
எறிகட் பேதுறல் ஆய்கோ டிட்டு;
'வாய பற்றுநின் படரதெ ணீங்க
வருவேம்' என்ற பருவம் உதுக்காண்;
தனியோ ரிரங்கும் பனிகூர் மாலைப்
பல்லான் கோவலர்க் கண்ணி
சொல்லு வன்ன முல்லைமென் முகையே.

(உரை). இறுகிய இழைகள் நெகிழ்ந்து விழும்படி விம்மி விம்மி நீரைச்சொரிந்து அழுகின்ற கண்ணோடு, காதலர் சென்றநாளைக் கோடிட்டு எண்ணியெண்ணி இவ்வாறு பேதுற்று வருந்தாதே. 'நான் சொல்வதை உண்மையாகப் பற்று; உனது துன்பத்தின் எண்ணிக்கை நீங்குமாறு தவறாமல் வருவேன்' என்று தலைவன் குறித்துச்சென்ற பருவம் இதோ வந்தது. தனிமையுற்றார் வருந்தும் குளிரோடு கூடிய மாலைப்பொழுதில் தாம் மேய்த்த பல பசுக்களையும் ஓட்டிக்கொண்டு வீட்டுக்குத்திரும்பும் கோவலர் சூடிய கண்ணியின் மெல்லிய முல்லையரும்புகள் மலர்ந்து இது கார் காலமென்பதை நமக்குச் சொல்லுவனவாயினகாண்.

எறிகண் - நீரை இறைக்குங்கண். வாய் - வாய்ச்சொற்கள். சொல்லுவன்ன - (விரித்தல் விகாரம்) சொல்லுவன.

பேயனார்] 359 [மருதம்

பரத்தையிற் பிரிந்து மீண்ட தலைவன் வாயில்வேண்டாது தானே புக்குந் தலைவியுடன்கூடி மகிழ்ந்திருந்ததைத் தோழி பாணனுக்குச் சொல்லியது.

கண்டிசிற் பாண; பண்புடைத் தம்ம;
மாலை விரிந்த பசுவெண் ணிலவிற்
குறுங்காற் கட்டி னறும்பூஞ் சேக்கைப்
பள்ளி யானையி னுயிரா, அசைஇப்
புதல்வற் றழீஇயினன் விறலவன்;
புதல்வன் றாயவன் புறங்கவை யினளே.

(உரை). அந்திநேரத்தில் விரிந்த புதிய வெள்ளிய நிலவில் குறுகிய காலையுடைய கட்டிலின்மீது மணமுள்ள பூக்கள்பரப்பிய படுக்கையில், (தலைவியின் ஊடலை) வென்ற தலைவன் யானையைப் போல உயிர்த்துத் தங்கிப் புதல்வனைத் தழுவினான்; அவனுடைய முதுகை அப்புதல்வன்தாய் தழுவினாள். அது மிகவும் தகுதியையுடையதே; அதை, பாண, நீ அறிந்திடுவாயாக.

உயிரா - உயிர்த்து. அசைஇ - தங்கி. விறலவன் -விறல், வெற்றி. பிறருதவியின்றித் தானே தலைவியின் ஊடலை புணர்த்திக் கூடினமையின், தலைவனை 'விறலவன்' என்றானாம். கவையினள் - தழுவினாள். 'புதல்வற்றழீஇயினன்....... கவையினளே'என்றதனோடு பின்வரும் ஐங்குறுநூற்றுப்பாட்டுக்களை ஒப்பிகே:—

புதல்வற் கவைஇய தாய்புற முயங்கி
நசையினன் வதிந்த கிடக்கை...
இனிதா லம்ம; பண்புமா ருடைத்தே—(402)
புதல்வற் கவையினன் தந்தை; மென்மொழிப்
புதல்வன் தாயோ இருவருங் கவையினள்;
இனிது மன்றவர் கிடக்கை—(409)

---

மதுரை யீழத்துப் பூதன்தேவனார் } 360 [குறிஞ்சி

சிறைப்புறத்தனாக தலைமகன் கேட்டுக் களவொழுக்கந் தவிர்ந்து வரைந்துகொள்ளுமாறு, வெறியெடுக்கலுற்றதை யஞ்சிய தோழிக்குச் சொல்லுவாள்போன்று தலைமகள் கூறியது.

வெறியென வுணர்ந்த வேலன் நோய்மருந்
தறியா னாகுத லன்னை காணிய,
அரும்பட ரெவ்வம் இன்றுநா முழப்பினும்
வாரற்க தில்ல, தோழி, சாரற்
பிடிக்கை யன்ன பெருங்குர லேனல்
உண்கிளி கடியுங் கொடிச்சிகைக் குளிரே
சிலம்பிற் சிலம்புஞ் சோலை
இலங்குமலை நாடன் இரவி னானே.

(உரை). தோழீ, வெறியாட்டெடுத்துக் குறிசொல்வதை யறிந்த வேலன் நானுற்ற நோய் இன்னதென்றும், அதைத் தீர்க்கு மருந்து இஃதென்றும் அறியானாதலை அன்னை நன்கு உணருமாறு, தாங்கற்கரிய துயருழந்து நாம் வருந்தினும் வருந்துவோமாக; பெண்யானையின் துதிக்கையைப் போலப் பருத்து நீண்ட கதிர்களையுடைய தினைப்பயிரை உண்ணவருங் கிளிகளையோட்டுங் குறமகளிர்தம் கையிலுள்ள குளிரென்னுங் கருவியினொலியே மலையெங்குமொலிக்குஞ் சோலையோடு கூடிய சாரலையுடைய மலைநாடன் இன்றிரவில் (இங்கு) வாராதொழிவானாக.

நோய் மருந்து - நோயையும் மருந்தையும் என எண்ணும்மையும் இரண்டனுருபும் விரிக்க. காணிய - காணுமாறு, அறியுமாறு. தில்ல - 'தில்' என்னு மிடைச்சொல் இங்கு விழைவின்கண் வந்தது. குளிர் - ஒருவகைக் கிளியோட்டுங்கருவி.

---

கபிலர்] 361 [குறிஞ்சி

வரைவொடுவந்த தலைமகனுக்குத் தலைமகளின்தமர் வரைவெதிர்ந்ததை அறிந்து தனக்குணர்த்திய தோழிக்குத் தலைமகள் உவகைமிக்குக் கூறியது.

அம்ம, வாழி தோழி, அன்னைக்
குயர்நிலை யுலகமுஞ் சிறிதால், அவர்மலை
மாலைப் பெய்த மணங்கம ழுந்தியொடு
காலை நிவந்த முழுமுதற் காந்தள்
மெல்லிலை குழைய முயங்கலும்,
இல்லுய்த்து நடுதலுங் கடியா தோட்கே.

(உரை). தலைமகனது மலையிடத்து மாலைக்காலத்திற் பெய்த நீர்த்திவலை பொருந்திய மணங்கமழும் நடுவிடத்தைக் கொண்டு மாலையில் குலைகுலையாகப் பூத்தெழுந்த இதழொடியாத காந்தளின் இதழாலும் இலையாலும் பின்னிய தழையுடை கசங்கிச் சிதையுமாறு தலைமகன் முன்போல என்னுடன் முயங்குதலையும், என்னை மணந்துகொண்டு தனதில்லின்கண் அமர்த்தி இல்லறம் நடத்தலையும் விலக்காது(எம்மணத்துக்கு உடன்பட்டவளாகிய)தாய்க்கு உயர்ந்த தேவருலகமும் சிறிதாம்.

உந்தி - வயிறு, உள்ளிடம். கடியாதோள் - கடியாதவளாகிய அன்னை என்க.

'அன்னைக்கு......சிறிதால்' என்றது அவள் செய்த நன்மைக்கு மேலான தேவருலகமும் தக்க கைம்மாறாகதென்றதாம்.

# அப்பர்

## அப்பரும் அறுபத்தினன்கு கலைகளும்.

### 16. ஓவியமும் கவித்துவமும்.

[905-வது பக்கத்தொடர்ச்சி]

மயில்—குயில்

மயில்புல்குதண் பேடையோடு னுடும்வளர் சாரல்
குயிலின்னிசை பாடுங்குளிர் சோலைக்கொடுங் குன்றம்
அயில்வேன்மலி நெடுவெஞ்சு டரனலேந்திநின் றுடி
எயின்முன்பட வெய்தானவன் மேயவ்வெழி னகரே.
சம்பந்தர்.

மயில்பேடை புல்கியால மணன்மேல்
மடவன்ன மல்கும்
பயில்பெடை வண்டு பண்செய்
பழங்காவிரிப் பைம்பொழில்வாய்க்
குயில்பேடை யோடு பாட
லுடையான் குடமூக் கிடமாய்
இயலொடு வானமேத்த விருந்தா
னவனெம் பிறையே. ஷை

எரிபிறைக் கண்ணியி னானையேந்திழையாளொடும்பாடி
முரிந்த விலயங்க ளிட்டு முகமலர்ந் தாடா வருவே
னரிநெடு முகுவெள் ளருவி யையா றடைகின்ற போது
வரிகுயில் பேடையோ டாடி வைகி வருவன கண்டேன்
கண்டே னவர் திருப் பாதம் கண்டறி யாதனகண்டேன்

ஏடுமதிக்கண்ணியினானை யேந்திழையாளொடும்பாடிக்
காடொடு நாடுமலையுங் கைதொழு தாடா வருவே
னுடலமர்ந்துறைகின்ற வையா றடைகின்ற போது
பேடைமயிலோடுங்கூடிப்பிணைந்து வருவனகண்டேன்
கண்டே னவர்திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்
அப்பர்-திருவையாறு-பண்-காந்தாரம் 3 & 5

மருவியெங்கும் வளரும் மடமஞ்ஞை
தெருவு தோறுந் திளைக்குந் திருப்புத்தூர்
பெருகி வாழும் பெருமா னவர்போலும்
பிரமன் மாலு மறியாப் பெரியோனே. சம்பந்தர்.

மெய்யெல்லாம் வெண்ணீறு சண்ணித்த
மேனியான் றாடொழாதே
யுய்யலா மென்றெண்ணி யுறிதூக்கி
யுழிதந்தென் னுள்ளம் விட்டுக்
கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ
மயிலாலு மாரூரரைக்
கையினாற் றொழாதொழிந்து கனியிருக்கக்
காய்கவர்ந்த கள்வ னேனே.
திருவாரூர் - பழமொழி - பண் - காந்தாரம் - 1.



சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கு முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பனென் புதுநலமுண் டிகழ்வானோ.
திருப்பழனம் - பண் - பழந்தக்கராகம் - 1.

நிலவெண் சங்கும் பறையும் மார்ப்ப நிற்கில்லாப்
பலருமிட்ட கல்ல வடங்கள் பரந்தெங்கும்
கலவமஞ்ஞை காரென் றெண்ணிக் களித்துவந்
தலம ராரூ ராதிரை நாளா லதுவண்ணம்
திருவாரூர் - திருவாதிரைத் திருப்பதிகம் - 5.

மரங்சண்மேன் மயிலால மண்டப மாடமாளிகை
[கோபுரத்தின்மேல்
திரங்கல் வன்முக வனப்புகப்பாய்த் திருப்பனையூர்
துரங்கன் வாய்ப்பிறந்தானுந் தாமலர்த்தோன்றலு
[மறியாமற் றோற்றிநின்
றாங்கலாட வல்லாரவரே யழகியரே. சுந்தரர்.

மலையினார் பருப்பதந் துரித்தி மாற்பேறு
மாசிலாச் சீர்மறைக் காடுநெய்த் தானம்
நிலையினா னெனதுரை தனதுரை யாக
நீறணிந் தேறுகந் தேறிய நிமலன்
கலையினார் மடப்பிணை துணையொடுந் துயிலக்
கானலம் பெடை புல்கிக் கணமயி லாலும்
இலையினார் பைம்பொழி லிலம்பையங் கோட்டூர்
இருக்கையாய்ப் பேணி யென்னெழில்
[கொள்வதியல்பே
சம்பந்தர்.

கோடிகளிடைக்குயில் கூவுமிடம்
மயிலாலுமிடம் மழுவாளுடைய
கடிகொள் புனற்சடை கொண்டநுதற்
கறைகண்டனிடம் பிறைதுண்ட முடிச்
செடிகொள் வினைப்பகை தீருமிடந்
திருவாகுமிடந் திருமார் பகலத்
தடிகளிடம்மழல் வண்ணனிடம்
கலிகச் சியமேனகங்காதவமே. சுந்தரர்.

கிளி

திங்கண்மதிக் கண்ணியி னானைத்
தேமொழி யாளொடும் பாடி
யெங்கரு ணல்குகொ லெந்தை
யெனக்கினி யென்னு வருவேன்
அங்கிள மங்கை யராடு
மையா றடைகின்ற போது
பைங்கிளி பேடையோ டாடிப்
பறந்து வருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதம்
கண்டறியாதன கண்டேன்.
திருவையாறு - பண் - காந்தாரம் - 10.

மைம்மாநீலக் கண்ணியர் சாரன் மணிவாரிக்
கொய்மா வேன லுண்கிளி யோப்புங் குற்றாலம்
கைம்மா வேழத் தீருரி போர்த்த கடவுளெம்
பெம்மான் மேய நன்னகர் போலும் பெரியீர்காள்!
சம்பந்தர்.

மன்னிப்புனங் காவன்மட மொழியாள்புனங் காக்கக்
கன்னிக்கிளி வந்துகவைக் கோலிக்கதிர் கொய்ய
என்னைக்கிளிமதியாதென்று வெடுத்துக்கவணொலிப்பத்
தென்றற்கிளி திரிந்தேறிய சீபர்ப்பத மலையே.

மையார் தடங் கண்ணண்மட மொழியாள் புனங்காக்கச்
செவ்வேதிரிந் தாயோவெனப் போகாவிட விளிந்து
கைபாவிய கவணான்மணி யெறியவிரிந் தோடிச்
செவ்வாயன கிளிபாடிடும் சீபர்ப்பத மலையே
* * * *

அப்போதுவந் துண்டீர்களுக்
கழையாதுமுன் னிருந்தேன்
எப்போதும் வந்துண்டாலெமை
யெமர்கள் சுளியாரோ
இப்போதுமக் கிதுவேதொழி
லென்றோடியக் கிளியைச்
செப்பேந்திள முலையாளெறி
சீபர்ப்பத மலையே. சுந்தரர்.

பந்துங் கிளியும் பயிலும் பாவை
சிந்தை கவர்வார் செந்தீ வண்ணர்
எந்தம் மடிக ளிறைவர்க் கிடம்போல்
உந்துந் திரைவா யொற்றி யூரே. சுந்தரர்

"பிள்ளைதுள்ளிக்கிளிபயில்வ கேட்டுப்பிரியாதுபோய்க்
கிள்ளையேனற் கதிர்கொணர்ந்து வாய்ப்பெய்யுங்கேதாரமே.
சம்பந்தர்.

மான்

மானுமரை யினமு மயிலினமுங் கலந் தெங்கும்
தாமே மிகமேய்ந்து தடஞ்சுனை நீர்களைப் பருகிப்
பூமா மரமுரிஞ்சிப் பொழிலூடேசென் றுபுக்குத்
தேமாம் பொழினீழற் றுயில் சீபர்பதமலையே.
சுந்தரர்.

விரும்புமதிக் கண்ணி யானை
மெல்லிய லாளொடும் பாடிப்
பெரும்புலர் காலை யெழுந்து
பெறுமலர் கொய்யா வருவே
னருங்கலம் பொன்மணி யுந்து
மையா றடைகின்ற போது
கருங்கலை பேடையோ டாடிக்
கலந்து வருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதம்
கண்டறியாதன கண்டேன்.
அப்பர்-திருவையாறு-பண்-காந்தாரம், 8.

தொண்டாஞ்சு களிறுமடக்கிச் சுரும்பார் மலர்
இண்டை கட்டி வழிபாடு செய்யு மிடமென்பரால்
வண்டுபாட மயிலால மான்கன்று துள்ளவரி
கெண்டைபாயச்சுனை நீலமொட் டலருங்கேதாரமே
சம்பந்தர்.

தேனுமா யமுதுமாய்த் தெய்வமுந் தானாய்த்
தீயொடு நீருடன் வாயுவாந் தெரியில்
வானுமா மெனதுரை தனதுரை யாக
வரியரா வரைக்கசைத் துழிதரு மைந்தன்
கானமான் வெருவுறக் கருவிர லூகங்
கடுவனோ டுகளுமூர் கற்கடுஞ் சாரல்
ஏனமா னுழிதரு மிலம்பையங் கோட்டூர்
இருக்கையாய்ப் பேணியென் னெழில்
[கொள்வதியல்பே ?
சம்பந்தர்.

அறையுமரி குரலோசை யஞ்சி யடு மானை
குறையும்மன மாகிம் முழை வைகுங் கொடுக்குன்றம்
மறையும் மவை யுடையானென நெடியானென விவர்கள்
இறையும் மறிவொண்ணுதவன் மேயவ்வெழினகரே.

(8) இயற்கையில் மலர், மரஞ்சேடி
முதலியன கோடுக்கும் அழகு

அருகெலாங் குவளை செங்நெ
லகவில்லை யாம்பல் நெய்தல்
தெருவெல்லாந் தெங்கு மாவும்
பழம்விழும் படப்பை யெல்லாம்
குருக்கினங் கூடி யாங்கே
கும்மலித் திறகுலர்த்தி
மருவலா மிடங்கள் காட்டும்
வலம்புரத் தடிகளாரே. சுந்தரர்.

திங்கள் தங்கிய செஞ்சடை மேலுமோர்
மங்கை தங்கு மணாள னிருப்பிடம்
பொங்கு சேர்மணற் புன்னையு ஞாழலுந்
தேங்கு சேர்கடம் பூர்க்கரக் கோயிலே.
திருக்கடம்பூர் - திருக்குறுந்தொகை. 5.

கோடல் கோங்கம் புறவணி முல்லைமேற்
பாடல் வண்டிசை கேட்கும் பைஞ்ஞீலியார்
பேடு மாணும் பிறரறி யாததோர்
ஆடு நாக மசைத்த வடிகளே.
திருப்பைஞ்ஞீலி - திருக்குறுந்தொகை 7.

நாட்கொண்ட தாமரைப் பூந்தடஞ்
சூழ்ந்த நல்லூரகத்தே
கீட்கொண்ட கோவணந் தாவென்று
சொல்லிக் கிறிபடத்தான்
வாட்கொண்ட நோக்கி மனைவியோடு
மங்கோர் வாணிகனை
யாட்கொண்ட வார்த்தை
யுரைக்கு மன்றோ விவ்வகலிடமே.
திருநல்லூர் - திருவிருத்தம் 7.

திருமளர் தாமரை சீர்வளர்
செங்கழு நீர்கொ ணெய்தல்
குருவமர் கோங்கங் குராமகிழ்
செண்பகங் கொன்றை வன்னி
மருவமர் நீள்கொடி மாடமலி
மறையோர்க ணல்லூர்
உருவமர் பாகத் துமையவள்
பாகனை யுள்குதுமே. ஷை - 10.

புக்கடைந்த வேதியற்காய்க் காலற் காய்ந்த
புண்ணியன்காண் வெண்ணகைவெள் வளையாளஞ்ச
மிக்கெதிர்ந்த கரிவெருவ வுரித்த கோன்காண்
அக்கரும்பு பெரும்புன்னை நெருங்கு சோலை
யாருருக் கதிபதிகா ணந்தண் தேன்றல்
தீக்கணைந்து வருமருங்கிற் றிருப்புத் தாரில்
திருத்தளியன் காணவனென் சிந்தை யானே
திருப்புத்தூர் - திருத்தாண்டகம் 8.

செல்வமல்கு சேண்பகம் வேங்கை சென்றேறிக்
கோல்லை முல்லை மேல்லரும் பீனும் குற்றாலம்
வில்லிநெல்க மும்மதி பெய்து வினைபோக
நம்கு நம்பானன்னகர் போலுங் நமரங்காள்
சம்பந்தர்.

"நாற விண்ட நறுமாமலர் கவ்வித்
தேறல் வண்டு திளைக்குந்திருப் புத்தூர்
ஊறல் வாழ்க்கை யுடையா ரவர் போலும்
ஏறு கொண்ட கொடி யெம்மிறை யாறே
சம்பந்தர்.

செய்யதண் சாரல் விரிநிற வேங்கைத் தண்போது
செய்யபோன் சேரும் சிராப்பள்ளிமேய செல்வனார்
தையலோர் பாக மகிழ்வர்நஞ் சுண்பர் தலையோட்டில்
ஐயமுங் கொள்வ ராரிவர் செய்கை யறிவாரே
சம்பந்தர்.

பல்லியல் பாணிப் பாரிட மேத்தப் படுகானின்
எல்லிந டஞ்செய் யீசனெம் மான்றன் னிடமென்பார்
கோல்லையின் முல்லை மல்லிகை மௌவற் கொடிபின்னிக்
கல்லியலிஞ்சி மஞ்சமர் கண்ணார் கோயிலே! சம்பந்தர்.

சேவுயருந் திண்கொடியான் றிருவடியே
சரணென்று சிறந்த வன்பால்
நாவியலு மங்கையொடு நான்முகன்றான்
வழிபட்ட நாங்கொள் கோயில்
வாவிதோறும் வண்கமல முகங்காட்டச்
செங்குமுதம் வாய்கள் காட்டக்
காவியிருங் கருகுவளைகரு நெய்தல்
கண்காட்டுங் கழுமலமே சம்பந்தர்.

மலையிலங்குஞ் சிலையாக வேகம்மதின் மூன்றேரி
தலையிலங்கும்புனற் கங்கை வைத்தவ்வடிகட்கிடம்
இலையிலங்கும்மலர்க் கைதை கண்டல்வெறிவிரவலாற்
கலையிலங்குங் கணத்தினம் போலியுங் கடற்கழியே
சம்பந்தர்.

ஞாழலுஞ் செருந்தியு நறுமலர்ப் புன்னையுந்
தாழை வெண்குருகய றங்கு யினலில்
வேழம துரித்த வெண்காடு மேவிய
யாழின திசையுடை யிறைவரல்லரே? சம்பந்தர்.

நாறுசெங்கழுநீர் மலர்நல்லமல்லிகை சண்பகத்தோடு
சேறுசெய் கழனிப் பழனத்திருப் பனையூர்
நீறுபூச்சி நெய்யாடி தன்னை நினைப்பவர் தன்மனத்தனாகிநின்
றூறு சூட வல்லாரவரே ழயகியரே சுந்தரர்.

குறும்பை முலை மலர்க்குழலி கொண்டதவங் கண்டு
குறிப்பினொடுஞ் சென்றவடன் குணத்தினைநன் கறிந்து
விரும்பும்வரம் கொடுத்தவளை வேட்டருளிச் செய்த
விண்ணவர்கோன் கண்ணுதலோன் மேவியவூர் வினவில்
அரும்பருகே சுரும்பருவ வறுபதம்பண் பாட
அணிமயில்க ளடமாடு மணிபொழில்சூ ழயலின்
கரும்பருகே கருங்குவளைக் கண்வளருங் கழனிக்
கமலங்கண் முகமலருங் கலையநல்லூர் காணே
சுந்தரர்.

யாழைப்பழித் தன்னமொழி மங்கையொரு பங்கன்
பேழைச்சடை முடிமேற்பிறைவைத்தானிடம்பேணிற்
றூழைப்பொழி லூடேசென்று பூழைத்தலை நுழைந்து
வாழைக்கனி கூழைக்குரங் குண்ணும்மறை காடே.

சிகரத்திடை யிளவெண்பிறை வைத்தானிடந்தெரியில்
முகரத்திடை முத்தின்னொளி பவளத்திர ளோத்த
தகரத்திடை தாழைத்திர ளுழற் றிரணீழல்
மகரத்தொடு சுறவங் கொணர்ந் தெற்றும்மறை காடே
சுந்தரர்.

தனியனென் றெள்கியறியேன்
றம்மைப்பெருது முகப்பன்
முனிபவர் தம்மை முனிவன்
முகம்பல பேசி மொழியேன்
கனிகள் பலவுடைச் சோலைக்
காய்முலை யீன்ற கமுகி
னினிய னிருப்பது மாரூ
ரவரெம்மையு மாள்வரோ கேளீர் சுந்தரர்.

வெயிற் கெதிர்ந்திடங் கோடா
தகங்குளிர்ந்த பைம்பொழில்
துயிற் கதிர்ந்த புற்றினங்கண்
மல்குதண் டுருத்தியாய்
மயிற் கெதிர்ந் தணங்கு சாயல்
மாதொர் பாக மாகமூ
எயிற் கெதிர்ந்தொ ரம்பினு
லெரித்த வில்லி யல்லையே சம்பந்தர்.



# இலங்கையின் வீழ்ச்சி.

அண்ணாமலைச் சர்வகலாசாலைத் தமிழ்ரீடர் ஸ்ரீமான் ஆர். பி. சேதுப் பிள்ளை அவர்கள் பி. ஏ. பி. எல். அச் சர்வகலாசாலை மண்டபத்தில் 11, 12-ந் தேதிகளில் "இலங்கையின் வீழ்ச்சி" என்பதைப்பற்றிச் செய்த இராமாயணப் பிரசங்கம் இது:—

"ஆராய்ச்சித்துறையில் ஆழ்ந்துபயிலும் எவருக்கும் தான் கண்ட பொருளை யறுதியிட்டுக் கூறுதல் எளியதொரு செயலன்று. வடமொழி வான்மீகி முனிவரின் இராமகாதையைப் பற்றுக்கோடாகக் கொண்டு தென்மொழிக் கம்பர், தன்னாட்டியலையும் பொன்னே போற் போற்றி இடையிடை புகுத்திப் பன்மணிக் கோவையாகச் செய்து செந்தமிழ்மகளுக் கணிந்த இணையற்ற ஆரமாம் இராமாயணத்தைப் பலரும் பல்வேறு துறைகளில் ஆராய்ந்து தாம்கொண்ட முடிபே முடிபென வெளியிடுகின்றனர். ஒரு சாரார் இராமாயணக்கதையை, இருவேறு அரசர்களின் பெரும்போர்ச் செயல்களைப் பாடல்வல்ல புலவரால் புனைந்துரைக்கப்பட்ட வரலாற்றுநூலாகக் கொள்கின்றனர். வேறொருசாரார் வைணவசமயம் மிக்க வடநாட்டார் தம் சமயத்தைத் தென்னாட்டிலும் நிலைநாட்டுவான் வேண்டித் தென்னாட்டில் முற்றியிருந்த சைவத்தை யொழிக்கப் படைகொண்டு தம்மெண்ணம் முற்றப் பெறாநந். தண்டமிழ்நாட்டாரோடு பொருத பூசலைக் கூறுவது இராமாயணம் என்பர்; மற்றொரு சாரார் ஆரியநாட்டு மன்னர்கள், திராவிட நாட்டரசர்களை வென்று தம் கொள்கைகளையும் அரசையும் நிலைநாட்டச் சூழ்ச்சிமேற்கொண்டு படைதிரட்டித் தென்னாடு போந்து தமிழ்மன்னனை மாய்த்துத் தம்மரசை நிலைநாட்டினர்; அவ்வரலாற்றைக் கூறுவதே இராமாயணம் எனக்கழறுவர். இம்முத்திறப் பகுதியில் எத்திறத்தையும் ஈண்டுவிரிக்காமல் இராவணன் தமிழனா?என்பதை மட்டும் ஒருசிறிது கூறிப் பின் எடுத்துக்கொண்ட பொருளில் புகுவோம்.

இராவணன் இன்னான் என்றறிவதற்குமுன் அவன் நாட்டில் வழங்கியமொழி யின்னதென்றறிதல் வேண்டும். அநுமான் சீதையினிடத்தில் எம்மொழியில் பேசுவதெனச் சிந்திக்கின்றான். "யான் வடமொழியிற் பேசப்புகுவேனாயின் இராவணனே இவ் வுருவுகொண்டு வஞ்சிப்பான்வந்தனன்" எனச் சீதை மருளும்; ஆதலால் தமிழ்மொழியிற் பேசுவதே ஐயத்திற்கிடமில்லையாகும்" எனக் கருத்துட்கொண்டு அவ்வாறு பேசினான் என்பது முதனூலார் கூற்று. இதனாலும், இராவணன் சாமகீதம் பாடிச் சிவபெருமானைப் பரவினான் என்று கொள்வதனாலும் இராவணன் பேசியது வடமொழியே யென்பது பெறப்படும்.தமிழனாயினும் வடமொழி கற்றிருக்கக்கூடும்; பேசவும் கூடும். ஆயினும் தாய்மொழியொழித்து வேறு மொழியை வழக்கமாகப் பேசுவான் என்பது இயற்கைக்கு ஏலாததொன்று. இராவணன் தமிழரசனாயின், செந்தமிழை வளர்ப்பதையே தந்தொழிலாகக் கொண்ட அகத்தியன் அவன்மேல் அளவற்ற வெறுப்புக்கொண்டு அவனை வேரோடழிக்க மனங்கொள்ளார் அன்றே! இராவணனைக் கொல்வதற்கு மாளாப் படைகளை மந்திரங்களோடு இராமனுக்குக் கொடுத்தவர் அகத்தியர் என்பதொன்றே அவருக் கவன்மாட் டிருந்த பெருவெறுப்பை வெளியிடும். ஓரறிவுயிர்களிடத்திலும் பேரருள் கொண்டொழுகிய பாரி பேகன் முதலியவர்கள் தமிழ்ப் பெருமக்கள்! அறத்துறை மறந்து மறத்துறை முற்றி நல்லோர்க்கருங் கூற்றாய் அல்லனவே செய்தொழுகிய இராவணன் அனைய இரக்கமற்றதமிழன் ஒருவனாயினும் இந்நாளளவும் இருந்ததாகத் தெரிகின்றிலேம். கூறிய இவ்வளவிற்றானே இராவணன் தமிழனல்லன் என்பது தெள்ளிதிற்புலனாம். இவ்வாராய்ச்சி இவ்வளவில் விடுத்து மேற்செல்லுதும்.

எல்லாச் செல்வத்திலும் குறைவற்று விளங்கிய இலங்கைமாநகர் வீழ்ந்தொழிவதற் கேது வென்னை யென்பதே ஈண்டெடுத்துக்கொண்ட பொருள். இலங்கையில் கல்விச்செல்வம் கரைபுரண்டு மேற்பட்டிருந்ததென்பதைக் கம்பரை யூன்றிப் படித்தார் காணுதொழியார். கலைகள் யாவையும் நிலைகண்டுணர்ந்தவன் இராவணன். அந்நகரில் வாழும் குடிகள் அனைவரும் நிறைந்த கல்வியாளர்களா யிருந்தார்கள்; அவர்கள் அறியாத பொருள் எவ்வுலகினும் இல்லை யென்றே சொல்லலாம். இலங்கையின் பொருட்செல்வத்தினை விரித்துக் கூற ஈண்டுக் காலம் இடந்தராது. "மரமடங்கலும் கற்பகம்; மனையெலாம் கனகம்; அரக்கருக்கு அரமடந்தையர் சிலதியர்; உரமடங்கி உழையராய் உழல்பவர் அமரர், மேருவும் வெள்குமாறு பொன்கொண்டிழைத்து மணியாற்பதித்தனவும், மின்னலைக்கொண்டு இயற்றினவோ வெய்யிலைக் கொண்டு சமைத்தனவோ? வேறென் கொண்டியற்றியனவோ வெனத் தெரிகிலாதனவாய்க் கொண்டலைவிட்டு மதிமண்டிலமளவும் உயர்ந்த மாடமாளிகைகள், கருத்த வாளரக்கிமாரும் அரக்கரும் கழித்து வெறுத்து வீசிய பூண்வெறுக்கையாலே வீதிகளெல்லாம் தூரும்; இன்னோரன்ன பொருட்குவையாவும் எஞ்சாது தன்னகத்துக் கொண்ட பெருஞ் செல்வப் பெருக்கம் மிக்க இலங்கைமாநகரத்திற்குத் துறக்கம் நரகமொக்குமெனின் அரக்கர்தம் திருவுக் களவை நினையலாமன்றி உவமை வேறு காண்டல் இயலாது" எனக் கவிஞர் கவின்பெறப் புகழ்ந்துரைத்தார். அந்நகரில் வாழும் மகளிர் "குழலும் வீணையும் யாழும் என்று இனையன குழைய மழலை மென்மொழிகளைக் கிளிக்கிருந் தளிக்கின்ற மெல்லியலாராவர்; ஆடவர் வீரத்தால் மேம்பட்டு விளங்குவதே பெருநோக்கமாகக்கொண்டு இருமாந்து நிகரற்று விளங்கும் காளையராவர். வேண்டிய வேண்டியாங் கெய்தப்பெறுதலால் " அளிக்குந் தேறலுண்டு. ஆடுநர் பாடுநர் ஆகிக் களிக்கின்றாரல்லாற் கவல்கின்றார் ஒருவரையும்" இலங்கை மாநகரிற் காண்டல் அரிது. அந்நகரிற் காணப்படும் ஆடவர் என்போர் அனைவரும் வீரஞ்செறிந்த வில்லாளர்கள்; கழலிலாக் காலும் அயில்வேலிலாக் கையும் காந்தும் அழலிலாக் கண்ணுமில்லா ஆடவர் அந்நகரியில்லை.

" விற்படை பெரிதென் கோயான்
வேற்படை மிகுமென் கோயான்
மற்படை யுளதென் கோயான்
வாட்படை வலிதென் கோயான்
கற்பணந் தண்டு பிண்டி
பாலமென் றினைய காந்தும்
நற்படை யுடைத்தென் கோயா
னுயகற் குரைக்கு நாளில்"

என அநுமன்வாயிலாகக் கவிஞர் இலங்கையில் இருந்த படைச்சிறப்பைக் கூறிப்போந்தார்.

இலங்கைமாநகரில் தலைமைபெற்று விளங்கிய சிறந்த வீரர் மூவர். மேகநாதன் கும்பகர்ணன் இராவணன் என்பவர்கள் ஒவ்வொருவருடைய வீரத்தையும் விளக்க விரித்துக்கூறவேண்டுவதின்று. மேகநாதனின் வீரத்தை அவன் பல தடவைகளில் பகைவரைப் படுகளத்தில் படுத்தியபாட்டால் அறியத் தகுந்ததே. தன் தம்பி அக்கன் அநுமனால் இறந்தான் என்பதைக் கேட்ட அளவில்,

"தம்பியை யுன்னுந் தோறுந்
தாரைநீர் ததும்புங் கண்ணன்
வம்பியல் சிலையை நோக்கி
வாய்மடித் தறுத்து நக்கான்
கொம்பியல் மாய வாழ்க்கைக்
குரங்கினு லுரங்கா வாற்றல்
எம்பியோ தேய்ந்தான்! எந்தை
புகழன்றோ தேய்ந்த தென்றான்.

உடன்பிறந்தான் இறந்தான் எனக் கேட்டும் உறுதுயர் உற்றிலன்; அழுதிலன், அங்கஞ் சோர்ந்திலன்; வம்பியல் சிலையைநோக்கி வாய்மடித்து நக்கான், எம்பியோ தேய்ந்தான் எந்தை புகழன்றோ தேய்ந்ததென்று வீரங்கொண்டு போருக்கெழுகின்ற இச்செயலொன்றே அவன் சிறந்த வீரத்திற்குச் சான்றுபகர்வதாகும்.

கும்பகர்ணன்வீரத்தைக் கம்பர் பல்வேறிடங்களில் பரக்கக் கூறுகின்றார். இராவணன் செய்த செயல் தவறுடைத்தெனத் தெரிந்தும், செஞ்சோற்றுக்கடன் ஒன்றையே கழிப்பான்வேண்டி இராமனம்பால் மாண்டான். கும்பகர்ணன் இராவணனுடைய வலதுகையாவான் என்னில் அவன் வீரத்திற்குச் சான்று சாலுமானது.

நிகும்பலையாகத்தை யழித்து நேர்நின்று போர் புரியச் சிறிதும் ஆற்றல் இல்லாதவனாக மேகநாதனை இலக்குவன் கலக்கியபோது, யார்கண்ணினும் படாது தன் தகப்பனிடத்துச் சென்று அவன் கூறுகின்றான்,

"குலஞ்செய்த பாவத் தாலே
கொடும்பழி தேடிக் கொண்டோம்
சலஞ்செயி னுலக மூன்று
மிலக்குவன் முடிப்பன்"

"ஆதலா லஞ்சி னேனென்
றருளினை ஆசை தானச்
சீதைபால் விடுதி யாயின்
அனையவர் சீற்றந் தீர்வர்
போதலும் புரிவர் செய்த
தீமையும் பொறுப்பர் உன்மேல்
காதலால் உரைத்தேன்"

என்றான். உலகெலாங் கலக்கி வென்றோனாகிய மேகநாதன் சொல்லைக் கேட்ட இராவணன் பெருஞ் சினங்கொண்டு தன் னளவற்ற வீரந்தோன்ற,

"பேதமை யுரைத்தாய் மைந்த
வுலகெலாம் பெயரப் பேராக்
காதையென் புகழி னோடு
நிலைபெற வமரர் காண
மீதெழு மொக்கு வன்ன
யாக்கையை விடுவ தல்லால்
[illegible]
[illegible]"

"இன்றுளார் நாளை மாள்வர்
புகழுக்கு மாறுறு தி யுண்டோ"

எனக் கூறினன். இராவணன் வீரத்திற்கு வேறு சான்று வேண்டா; கம்பர் காவியம் முழுவதும் இராவணன் வீரந் ததும்பிக் கரைபுரண்டோடுகின்றது.

அளவிலா ஆற்றல் வாய்ந்த இம் முத்தலை வீரரோடு ஒத்த பலவேறு படைத்தலைவர்களையும் உடையது இலங்கை; ஆழியையே தனக்க கழியாகக் கொண்டது; அமரர் வாழும் ஏழுலகின் வெளிகாறும் முகடேறிப் பொன்னாற் சமைத்த—வெள்ளத்தூழி திரிநாளும் உலையாத மதிலுக்குள் விளங்குவது; கருங்கடல் கடப்பது அரியதொரு செயலன்று, இந்நகர்க் காவற் பெருங்கடல் கடப்ப தரிதென்னுமாறு அரணம் மிக்குடையது இலங்கைமாநகரம். எவ்வகையிலும் குறைவற்று விளங்கிய இவ்வீரமா நகரம் வீழ்ந்தொழிந்ததற்குச் சரியான ஏதுகாட்டல் வேண்டும்; கம்பர் அதனைக் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் ஆண்டாண்டுச் சுட்டிச் செல்கின்றார்.

கம்பர் இலங்கையில் அமைத்த அமைச்சியன் முறைக்கும், அயோத்தியில் அமைத்த முறைக்கும் பெரிதும் வேறுபாடுண்டு. அயோத்தியில் அமைந்த அமைச்சு திருவள்ளுவர் கூறியாங்குத் திகழ்வது; அமைச்சர்கள் குலமுதற்றொன்மை யறிந்தவர்கள்; கலைகளில் வல்லவர்கள், கேள்விப்பயன் எய்தினவர்கள், உயிருக்கிறுதி பயப்பினும் நடுவே நோக்குபவர்கள், உற்றதுகொண்டு மேல்வந் துறுவது உணருங்கோளார்; மானத்தால் கவரிமான் அனையர்; காலமும் இடமும் ஏற்ற கருவியும் தெரியக் கற்றுணர்ந்து வினைசெய்பவர்கள்; சீலமும் புகழும் வேண்டுஞ் செய்கையுந் தெரிந்து தலைவற் குறுதி பயக்கும் தன்மையாளர். இன்னும்,

"தம்முயிர்க் குறுதி யெண்ணா
தலைமகன் வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி நீதி
விடாதுநின் றுரைக்கும் வீரர்
செம்மையிற் றிறம்பல் செல்லாத்
தேற்றத்தார் தெரியுங் காலம்
மும்மையு முணர வல்லார்
ஒருமையே மொழியும் நீரார்."

"நல்லவுந் தீயவு நாடி நாயகற்
கொல்லையின் மருத்துவ னியல்பின் எண்ணுவார்
ஒல்லைவந் துறுவன வுற்ற பெற்றியின்
தொல்லைநல் வினையென வுதவுஞ் சூழ்ச்சியர்"

இலங்கையில் அமைந்த அமைச்சு இம் முறைக்கு முற்றிலும் நேர் மாறுபட்டதாகும். சீதை வாயிலாகக் கவிஞர் இராவணனுடைய அமைச்சர்களின் தன்மையைக் கூறுகின்றார்.

"கடிக்கும்வல் லரவுங் கேட்கு
மந்திரங் களிக்கின் றோயை
அடுக்குமீ தடாதென் றுன்ற
வேதுவோ டறிவு காட்டி
இடிக்குந ரில்லை யுள்ளார்
எண்ணியது எண்ணி யுன்னை
முடிக்குநர் என்ற போது
முடிவன்றி முடிவ துண்டோ."

இத்தகைய அமைச்சு அரசுக்கு அங்கமாய் அமையின் அவ்வரசின்நிலை யாதாய்முடியும்? அநுமான் அங்கியங் கடவுளுக் கந் நகரை யளித்தகன்றதற்பின் அமைச்சர்களை யொருங்கழைத்து மேற்செய்வதை யாராய்கின்ற அரசன் தன்னக ரழிந்ததை யுன்னியுன்னி யாற்றாது மொழிகின்ற மாற்றங்களைக் கேட்ட அமைச்சர்கள் ஆய்ந்தோய்ந்து தங் கருத்துக்களை வெளியிடாது அரசன் கருத்துக் கியையுமாறு மாற்றமின்றி மந்திரங் கூறுகின்றனர். பகைவர்களின் வலியும் காலமும் இடனும் செய்வகையும் நன்காராய்ந்து சொல்லவேண்டிய மகோதரன் முதலிய மந்திரிகள் "சுள்ளியினிருந்துறை குரங்கின்றோள்வலிக் கெள்ளுதிபோலும் நின்புயத்தை யெம்மொடும்" என்று சொல்லும் சொற்களுக்கு ஒருபொருளு மில்லையாயினும் உடனுக்குடனே சிறிதும் காலந்தாழ்க்காது கூறுகின்றார்கள். இதுவோ மந்திரிகள் கூறும் மந்திரம்? மூடமந்திரமாகவன்றோ இது முடியும். இயல்பாகவே நல்லறத்தினின்று நழுவிய அரசனுக்கு இவ்வகை அமைச்சு அமையுமேல் எரியும் நெருப்பில் நெய்விட்டாற் போல முடியுமேயன்றி வேறு யாதாய் முடியக்கூடும்? இராவணனுடைய அமைச்சில் தப்பித்தடுமாறித் தான் ஒருவனே அறநெறி கூறி, வற்புறுத்துபவனாய் விளங்கினன் வீடணன். ஒற்றைமரம் தோப்பாகாதவாறு போல் அவனால் செயற்பாலதொன்றுமிலதாயிற்று. வீடணன் தன்னால் இயன்றஅளவு நன்னெறிகூறியும் விழலுக்கிறைத்த நீரேயாயிற்று. வீடணன் கூறுகின்றான். "கோநகர் முழுவதும் நினதுகொற்றமும் சானகியெனும் பெயர் உலகின் றம்மனை ஆனவள் கற்பினால்வெந்த தல்லதோர் வானரஞ் சுட்டதென் றுணர்தன் மாட்சியோ"

இராமனைக் கேவலம் ஆற்றலற்ற ஒரு மனிதனாகக் கருதவேண்டாம், உன்னை வாலிற்கட்டி எழு கடலுந் தாண்டிய வாலியைக் கொன்ற வீரன். எண்ணற்ற வானரங்கள் அவனுக்குப் படையாக அமைந்துள்ளன. கரன் முதலியோரை யொருவனே கொன்ற வல் வில்லாளன். ஆதலால் அவனை வெல்லுதல் அரிது.

"அசைவில் கற்பினவ் வணங்கை
விட்டரு ளுதியிதன் மேல்
விசையமில்" லெனச் சொன்னன்.

அறிஞரின் மிக்க பெறலருந்தம்பி ஆயினும் மாயைகள் பலவும் வல்லவன் "ஒயுறு சிந்தையானுக்கும் உறுதபேருறுதி சொல்லும்" மகோதரனை மந்திரியாகப் பெற்ற மன்னன் வீடணன் மொழிகளுக்கு எவ்வாறு செவிசாய்க்க முடியும்? இலங்கையின் அமைச்சியல் இத்தகையது.

மன்னவனோ அறத்துறை பலவும் ஐயந்திரிபறக் கற்றவனாயினும் கற்றபடி நில்லாக் காவலன்; இரக்கமென்பது இன்னதென்றறியாத இராக்கதன், நல்லோர் திறத்து நேரானாய் அல்லோர் திறத்தே சார்ந்தவன்

"அறம்புகா திந்த அணிமதிற்
புறத்து நின் றகத்தின்,"

எனக்கவிஞர் அந்நாட்டில் அறங்காணாத முறைகளைத் திறம்பட உரைக்கின்றார்.

இறுதியாகக் கூறுமிடத்து இராவணனுடைய தங்கையாகிய சூர்ப்பநகையே அவனுக்குப் பெரும் பகையாகத் தோன்றினள்.

"நீலமா மணிநிற நிருதர் வேந்தனை
மூலநா சம்பெற முடிக்கும் மொய்ம்பினாள்"

எனக் கவிஞர் வெளிப்படக் கூறிச் செல்கின்றார். இராவணன் இறந்தபின் ஆற்றாது புலம்பும் வீடணனும்,

"கொல்லாத மைந்தனைக்
கொன்றாயென் றதுகுறித்துக்
கொடுமை சூழ்ந்து
பல்லாலே யிதழதுக்குங்
கொடும்பாவி நெடும்பாரப்
பழிதீர்த்தாள்"

என முன்னை வரலாற்றினை வெளியிடுகின்றார்.

இதுவரையிற் கூறியவற்றால் இலங்கையின் வீழ்ச்சிக்குக் காரணம் இனிது விளங்கும். நல்லிலக்கணஞ் சிறிதும் தம்மிடத் தமையப்பெறாத அமைச்சராலும் அறத்துறை திறம்பி இரக்கமற்ற செயல்களை அரசன் மேற்கொண்டதனாலும் சூர்ப்பநகையின் சூழ்ச்சியினாலுமே எவ்வகையிலும் குறைவற்ற வீரமா நகரம் வீழ்ந்தொழிந்தது.

"சுதேசமித்திரன்"



ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலை,
நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.
யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்
குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்
SADVAIDYASALA NANJANGUD
THE UNITED CONCERN, MADRAS
டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்களுக்கு ரூ. (1-8-0)
பிரான்சு:
டிப்போ, பம்பாய்
கல்கத்தா
NANJANGUD TOOTH POWDER
மதுரை.
காஞ்சிபுரம்.

# மரணத்தருணம்.

18-வது நூற்றாண்டில் இருந்த ரிச்சர்ட் ஸ்டீல் என்னும் ஆங்கிலப்புலவன் வரைந்த ஒரு கட்டுரையின் மொழிபெயர்ப்பு:—

ஒருநாட் காலையில் உவகையால் விம்மலுற்ற மனத்தினோடு எனதறையில் நான் அங்குமிங்கும் நடந்தனனாயிருக்கையில் என்வீட்டு வாயிலின் முன் ஒரு வண்டி வந்து நிற்கக்கண்டேன். வயது பதினைந்தும் நிறைவுறாத ஓரிளஞ்சிறுவன் அவ் வண்டியினின்றிழிந்து என் வீட்டினுள் புகுந்தான். உட்புகுந்த இளவலிவன் எனது அண்மிய நண்பனொருவனுடைய செல்வப்புதல்வனெனத் தெரிந்தேன். இவ்விளையவன் வருகை பழைய நினைவினை யெழுதருமோருவகையை எனக்களித்தது. இன்னவன்தந்தைக்கும் எனக்கும் நட்பு உண்டாய காலத்தில் அவனுக்கு வயது பதினைந்துதான். வந்த குமரனை நான் உள்ளக்களிப்புடன் வரவேற்க அவனோ என்னிரு கரங்களையும் பற்றியவாங்கே தேம்பித்தேம்பி அழலானான். என் மனமும் இந்நிகழ்ச்சியால் சோர்வுற்றது. சிறுவனை நோக்கி நான், 'குழந்தாய் நின் தந்தை சுகமோ?' என்றேன். அவன், 'ஐய, என் அன்னை......'' என்னலும் அவன் உள்ளத்துத் துக்கமெலாம் பெருகலாக, மேலொன்றும் சொல்வதற்கியலாது கண்ணீரால் பூர்த்தி செய்தான். சிறுவனைத் தேற்றியவண்ணமாய் வண்டிக்கு அழைத்துச் சென்றேன். சிறிதுசிறிதாக, அவ்விளவலிடமிருந்து, அவனன்னை மரணத்தருவாயில் இருப்பதையும், பாதிரியார் சடங்குகளை நடத்துவதையும் துயரால் நைந்தழியுந் தன் தந்தையின் நிலையையும், அத்தந்தையை ஆற்றித் தேற்றுதற்கென அவன் என்பாற் போந்த செய்தியையும் தெரிந்துகொண்டேன். பிறர் சொல்லாது தானாக என்னை அழைத்துச் செல்லவந்த அச்சிறுவனது அறிவின்பெருமையும், பெற்றோரிடம் அவனுக்குள் அன்பின் திறமும் என் னகங்கரையச் செய்தன. கரைந்தென்ன செய்வது? நண்பன்பால் நான் ஆற்றவேண்டிய கடமையை உன்னி எனது துயரை அடக்கிக்கொண்டு சிறுவனுடன் புறப்பட்டேன். மரணத்தருவாயிலிருக்கும் அம்மாண்புடை மாதராளின் குணநலமும், அவள் இல்லறம் நடத்திய சிறப்பும், புருடனது நற்காலத்திலும் கெட்ட காலத்திலும், அவனுக்கமைந்த சுகதுக்கங்களைப் பகிர்ந்துகொண்டு அவள் வாழ்ந்ததும் ஆயபல நினைவுகள் என் மனமிசை ஒன்றின்பின் ஒன்றாய்த் தொடரலாயின. இத்தகைய இல்லாளை இழப்பதால் என்நண்பன் எய்தும் துயரத்தின் அளவினது தன்மை ஈதென எண்ணியவென் மனம் சோர்வுற்றது. நண்பனை எப்படிக் காண்பது? எப்படி அவனது பெருந்துயரை ஆற்றுவது, என்று திகைத்தேன். முன்னொருகால் அவள் நோயுற்று வருந்திய அவத்தையைத் தன்வாயற் சொல்லவும் இயலாது இவன் இரங்கினன். முன்னைய அந்நோய் அவளுயிரிற் கொன்று மூறு செய்யாது அகன்றது. அத்தகைய இளகிய நெஞ்சமுடைய இவன்தன் மனைவியைத் துறப்ப தெனின் பொறுப்பனோ?

வண்டியும் நண்பனது வீடுவந்தடைந்தது. இறங்கி நான் உட்புகுகையில் ஈமக்கிரியை நடத்தவந்துள பாதிரியை வாயிற்படியண்டை கண்டேன். அவர் இன்று இக்காரியத்திற்கு வந்திருப்பது காண எனதுள்ளம் ஒருவழி உவந்ததென்னலாம். முன்னொருகால் நெடும்போழ்து நானவருடன் உரையாடியுள்ளேன். நல்லறிவும் அவ் வறிவினால் எய்தப்பெறும் வாழ்க்கைத் தூய்மையும் உடையவர் இப்பாதிரி. அவரிடம், கட்சிவாதமும் சமயவழக்கின்வன்மும் இருக்கக் கண்டார் எவருமிலர். ஆதலால் அவரொடுநான் அன்று பேசிக்கொண்டிருக்கையில், அவரது அரிய உரைகளைச் செவிமடுத்துண்டேன். எங்களது பேச்சு மெல்ல மெல்ல 'மரணம்' எனபதைப் பொருளாகக்கொண்டு படரலாயிற்று. அவர் உரையின் செறிவினாலும், பொருளின் ஆழத்தாலும் 'சாவு' என்பது பிறப்பு என்பது போன்றவொரு நிகழ்ச்சியே அல்லாமல் நாம் அஞ்சி வாடுவதற்கானவொன்றன்றென்றும், வந்தக்கால் அதனை நாம் நனியுவந்து வரவேற்கவே வேண்டுமென்றுந் துணியலாயினேன். இன்று நான் அவரைச் சந்தித்ததும், கருணையும் பருவரலு மவர்முகத்திற் கலந்திருக்கக் கண்டேன். ஆனால் அத்துயரந்தான் அளவிறவாது காக்குமொரு அமைதிவாய்ந்த திட்பமும் அம்முகத்தில் தெளிந்திருந்தது. சாவின் கைப்படுவார் வருத்தத்தையும், உற்றார் உறவினர் துக்கத்தையும் ஒருங்கே தீர்த்துவிடும் சக்தியை அத்திட்பத்தில் கண்டேன். பின் நண்பன் மனைவி இருக்கும் அறையினுட் சென்றேன்; சென்ற நான் நண்பனைக் கண்டேன். இதுவரைத் துயரை உள்ளடக்கி வைத்திருந்த என் நண்பன் என்னைக் கண்டதும், முகத்தை வேறுபக்கம் திருப்பிக்கொண்டு குழந்தை யென அழுதான். அருகு நின்றுகொண்டிருந்த குழந்தைகளும், தங்கள் தங்கள் வயதிற்கும் விஷயத்தை அறியும் தன்மைக்கும் ஏற்றபடி அழுதனர். மூத்தபெண் கண்ணீரைப் பெருக்கிய வண்ணமாய் அன்னையருகு இருந்துகொண்டு அவளுக்கு ஆவன செய்துவந்தாள். மற்றப்பெண்கள் கட்டிலின் அருகில் ஏங்கி நின்று தேம்பினர். இளங்குழந்தை யொன்று தந்தையும் தமக்கைகளும் அழுவதைப் பார்த்துத் தானும் விம்மி விம்மி அழுதுகொண்டிருந்தது. காலனது கையிலே படவிருக்கும் அம்மாது ஒருத்திதான் துயரங் கடந்தவளாகக் காணப்பட்டாள். நான் கட்டிலினருகு சென்றேன். சென்றதும் என்னை யவள் நோக்கி, மெல்லிய குரலில் 'உங்களுடைய நண்பரைப் பார்த்துக் கொள்ளுங்கள், அவரைவிட் டகலாதீர்...... என்று தொடர்பிலா வார்த்தைகளைக் கூறிச் சும்மாவிருந்தாள். அவள் தன் கணவனிடத்திலும் குழந்தைகளினிடத்திலும் முன்னரே விடைபெற்று விட்டாள். உள்ளத்தில் வெள்ளமெனப் பெருகுகின்ற தன் துக்கம் எங்குத் தன் மனைவியின் துன்பத்தை வளர்க்குமோ என்று அஞ்சி நண்பன் தன் துக்கத்தை வெளிக்காட்டாது உள்ளேயே உருகிக் கொண்டிருப்பதும், தன் துயரை நாயகன் ஓராதவா றதனையவள் அகத்தே புதைத்து அமர்வதும் ஆய இந்நிலை என் உள்ளத்தை வாள்போல் அறுத்தது.

உரையரிய வெந்துயரில் நீந்தியவாங்கே நாயகனைச் சிறிதுபோழ்து உருகி நோக்கியபின் நீங்கலில் நெடுந்துயில் ஆழ்ந்துபோயின அப் பெருந்தகையாள் கண்கள்.



# நம்மாழ்வார் வைபவம்.

## திருவாய்மொழி.

[914-வது பக்கத் தொடர்ச்சி]

### இரண்டாம் பத்து—5-ம் தசகம்.

1-ம் பாசுரம்.

அந்தாமத் தன்புசெய் தென்னாவி சேரம்மானுக்கு
அந்தாம வாழ்முடி சங்காழி நூலாரமுள
செந்தாமரைத் தடங்கண் செங்கனிவாய் செங்கமலம்
செந்தா மரையடிகள் செம்பொன் திருவுடம்பே.

அவதாரிகை:—முன்தசகத்தின் இறுதிப் பாசுரத்தில் அருளிச்செய்தபடி தோற்றியருளிய எம்பெருமான் தம்மோடு கலந்த கலவியும் அக்கலவியால் தமக்குப் பிறந்த பெரும் நன்மையையும் பேசுகிறார். சென்ற 3-ம் தசகத்தில் வைகுண்டத்தில் நித்தியஸூரிகளுடன் எம்பெருமானை யநுபவிக்க வேண்டுமென்ற அளவில் அவன் வரக்காணாமையாலே மிக வியஸநமுற்று; சென்ற "ஆடி ஆடி" என்கிற தசகத்தில் விரஹதசையை அநுபவித்தவர் இத்தசகத்தில் வைகுண்டத்தில் அவனிருப்பைச் சந்தோஷமாய் அநுபவிப்பது எங்ஙனே எனில்—தம்மோடு அவன் கலக்கும்போது திவ்விய ஆபரணங்களுடன் வந்து கலக்கையாலே ஆழ்வாருக்குப் பரிபூர்ணமான மனோரதம் உண்டாய் அந்தக்கலவை தமக்கு ஆறாத அமுதமானதை அவர் சொல்லக்கூடுமென்பது கருத்து.

பொழிப்புரை:—நித்தியமாயும் நிர்த்தோஷமாயும் மங்களகரமாயுமுள்ள திவ்விய தர்மத்தில் (வைகுண்டம்) செய்யும் ஆதரவும் பிரியமும் என் பக்கலிலே செய்துகொண்டு, திவ்விய கிரீடம் ஹாரம் முதலான ஆபரணங்களைத் தரித்து வெகு அழகான செந்தாமரைக்கண்களும் செங்கனிவாயும் கமலமன்ன பாதங்களும் பொருந்திய வடிவுடனும் வந்து ஸகல கல்யாணகுணங்களுடனும் சுத்தமான தங்கச் சாயையுடைய திவ்விய சரீரனாய் என்னோடு கலந்தருளினான்.

குறிப்புக்கள்:—"நூல்-யஞ்ஞோபவீதம். என்னாவி சேர் அம்மான் - என்னோடு கலந்தருளினவர்.

பின்வரும்பாட்டுக்களிலும் இந்தக்கருத்து அடங்கியிருப்பதாகக் கொள்ளவேண்டும்.

சங்கு ஆழி இவைகளை எல்லா நித்தியஸூரிகளுக்கும் உபலக்ஷணமாகக் கொள்ளவேண்டும்.

பகவானது ஆபரணங்களின் தேஜஸும் ஸேர்வையும் ஆழ்வார் கண்டுகந்தமையால் அவைவிசேஷமாய்ப் பிரகாசித்தன வென்றும், இவர் உகப்பே பகவானுக்கு அத்தியந்தம் அபேக்ஷித மாகையாலே அவைகளுக்குப் புதுப்புது சேர்வையை அவனே விரும்பிச் சங்கல்பித்தானென்றும் கொள்ளவேண்டும்.

பகவானுடைய தேஜஸு தங்கவர்ணமென்று உபநிஷத்துக்களில் வர்ணித்திருக்கிறபடி ஆழ்வார் திருக்கண்களுக்கும் தோன்றியதாகக் கொள்ளவேண்டும்.

---

2-ம் பாசுரம்.

திருவுடம்பு வான்சுடர் செந்தாமரைகண் கைகமலம்
திருவிடமே மார்வம் அயனிடமே கொப்பூழ்
ஒருவிடமு மெந்தை பெருமாற் கரனேயோ
வொருவிட மொன்றின்றி யென்னுள் கலந்தானுக்கே

பொழிப்புரை :—செந்தாமரைக்கண் கைக்கமலங்களுடன் என்னோடு கலந்தருளினவன் திருமார்பை இலக்குமிக்கு இடமாக்கினவன். கொப்பூழில் அஜனை பிரம்மாவுக்கு இடம் கொடுத்தவன். சிவபெருமானுக்குத் தன்னுடைய தக்ஷிணபாகத்தை வீற்றிருக்கக் கொடுத்தவன். இப்படியெல்லாம் தன்தேஜோமயமான திருவுடம்பில் சிற்சில பாகங்களை உதவிய பிரபு என் விஷயத்தில் அப்படி ஒரு பாகத்தைமாத்திரம் உதவாமல் "ஒருவிடம் ஒன்று இன்றி" (அதாவது தம் திருவுடம்பில் ஒருபாகம் கூட ஒளியாமல்) எல்லா அவயவங்களுடன் அடியேனுக்குப் பரமகிருபையால் உதவி, நான் அநுபவிக்கும்படி கலந்தருளினான்.

குறிப்பு:—ஆழ்வார், தமக்கு விளைந்த சமர்த்தியைத் தந்தை தந்தானென்கிறார்.

---

3-ம் பாசுரம்.

என்னுள் கலந்தவன் செங்கனிவாய்ச் செங்கமலம்
மின்னும் சுடர்மலைக்குக் கண்பாதம் கைகமலம்
மன்னும் மூவே ழுலகும் வயிற்றினுள
தன்னுள் கலவாத தெப்பொருளும் தானில்லையே

பொழிப்புரை:—என்னுள் கலந்தவனான எம்பெருமான் சுடராலும் காந்தியாலும் அஸாதாரணமான தேஜஸாலே மலைபோல் விளங்காநின்றான். அவன் திருவுடம்பிற் பாதங்கள் கண்கள் அதரம் இவைகள் எல்லாம் கமலங்கள்போல் ஒளி வீசுகின்றன. இந்த ஸ்திரமான ஏழு உலகங்களும் அவன் திருவயிற்றில் உள. அவைகளின் ஸ்திதி பிரவர்த்தி ஸ்வரூபங்கள் அவனது ஆக்ஞையிலே அடங்கியிருக்கின்றமையால் அவனைக் கலவாமல் அவைகள் இல்லை.

குறிப்பு:—இப்படி ஏழுலகையும் நடத்தும் மஹான் என்னுள்ளே எனக்கு நிர்வதிக ஸமர்த்தியுண்டாகும்படி கலந்தருளினான் என்று தம்பேற்றை சிலாஹித்துப் பாடுகிறார்.

---

4-ம் பாசுரம்.

எப்பொருளும் தானாய் மரகதக் குன்ற மொக்கும்
அப்பொழுதைத் தாமரைப் பூக்கண் பாதம்கைகமலம்
எப்பொழுதும் நாள் திங்க ளாண்டூழி யூழிதொறும்
அப்பொழுதைக் கப்பொழு தென்னாரா வமுதமே.

அவதாரிகை:—இப்பாசுரத்திலே பகவானது அழகை வர்ணித்து அதனாலே தனக்குண்டான ஈடுபாட்டைப் பேசுகிறார்.

உரை:—எப்பொருளும் தானாய் - முன்பாசுரத்தில் கூறியபடி எல்லாப்பொருளும் தானாய், மரகதக் குன்றமொக்கும் - தன்னுடைய பச்சைவர்ணமான திவ்விய திருமேனியாலே மரகதக் குன்றுபோல் விளங்கும். பூத்தவுடன் பூர்ணசேவையுடனே விளங்கும் தாமரைப் பூப்போல் திருக்கண்கள் பாதங்கள் கைகள் விளங்கும். நாள்தோறும் திங்கள்தோறும் கல்பம்தோறும் நாம் அனுபவித்த வஸ்துதானே என்று தோன்றாமல் எத்தனை யூழிக்காலம்வரை இருந்தாலும் நமக்கு க்ஷணே க்ஷணே புதுமைபோல் எல்லாக்காலத்திலும் இரசமாய் அநுபவிக்கவுள்ள வஸ்துவாய் நின்று ஒருபொழுதும் திரும்பி வாராத அற்புத வஸ்துவாய்த் தன் திவ்விய அழகாலே விளங்குகிறான் என்கிறார்.

# தமிழ்ப் பாடம் 147.

[ சென்ற வாரத் தொடர்ச்சி ]

## இலக்கணம்

[ 916-வது பக்கத் தொடர்ச்சி ]

னகர மெய்யீறு.

III (b) நிலைமொழி யிறுதியில் னகரமெய் + வருமொழி முதலில் தகரமெய்.

(1) வருமொழி முதலில் ககர சகர பகரங்கள் நிற்க, எவ்வெவ் விடங்களில் நிலைமொழியீற்று னகரமெய் றகரமெய்யாகத் திரியுமோ, அவ்வவ்விடங்களில் தகரமெய் நின்றாலும் அந்த னகரமெய் றகர மெய்யாகத் திரியும்; இந்த னகர ஈறு றகரமெய்யாய்த் திரிவதுமாத்திரமன்றி வருமொழிமுதலில் நின்ற தகரமும் பெரும்பாலும் றகரமாகத் திரியும்:—

பொன் + குடம் = பொற்குடம்
பொன் + தட்டு = பொற்றட்டு } 3-ம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

கையான் + பிடித்தேன் = கையாற் பிடித்தேன்
கையான் + தொட்டேன் = கையாற் றொட்டேன். } மூன்றும் வேற்றுமை யுருபு.

பொன் + குன்று = பொற்குன்று
பொன் + தார் = பொற்றார். } பண்புத் தொகை.

மலையின் + பெரிய தோள் = மலையிற் பெரியதோள்
அமிழ்தின் + தித்திக்குஞ்சொல் = அமிழ்திற் றித்திக்குஞ்சொல் } ஒப்புப்பொருளில் வந்த 5-ந்தாம் வேற்றுமை இன்னுருபு.

உடலின் + பிரிந்த உயிர் = உடலிற் பிரிந்த உயிர்
மலையின் + தீர்ந்த அருவி = மலையிற் றீர்ந்த அருவி } 5-ந்தாம் வேற்றுமை நீங்கற் பொருள்.

கொடுப்பின் + சொல்வேன் = கொடுப்பிற் சொல்வேன்
நடப்பின் + தொடர்வேன் = நடப்பிற் றொடர்வேன் } செயின்என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

கற்றார்முன் + சென்றான் = கற்றார்முற் சென்றான்
கற்றார்முன் + தோன்றா கழிவிரக்கம் = கற்றார்முற் றோன்றா கழிவிரக்கம் } முன், என்னும் ஏழாம் வேற்றுமை யுருபு.

மனைவயின் + பார்த்தேன் = மனைவயிற் பார்த்தேன்
மனைவயின் + தங்கினான் = மனைவயிற் றங்கினான் } வயின், என்னும் ஏழாம் வேற்றுமை யுருபு.

குறிப்பு:—என் தன் என்னும் சொற்களினீற்று னகரமெய் ககர சகர பகரங்கள் வர றகரமாகத் திரியுமிடத்தும், வருமொழிமுதல் தகரமெய் வருமானால் அந்த னகரமெய் றகரமெய்யாகத் திரியாமல் வருமொழிமுதல் தகரமெய் மாத்திரம் றகரமெய்யாகத் திரியும்.

தன் + சிறப்பு = தற்சிறப்பு
தன் + தலை = தன்றலை }
என் + புகழ் = எற்புகழ்
என் + தாதை = என்றாதை }

(2) நிலைமொழியீற்று னகரமெய், வருமொழி முதலில் ககர பகரங்கள் நிற்க, எவ்வெவ்விடங்களில் றகரமாகத்திரியாமல் இயல்பாயிருக்குமோ அவ்வவ்விடங்களில் தகரம் நின்றாலும் இயல்பாயிருக்கும். ஆனால் வருமொழிமுதலில் நின்ற தகரம்மாத்திரம் றகரமாகத் திரியும்:—

பொன் + கொடுத்தான் = பொன் கொடுத்தான்
பொன் + தந்தான் = பொன் றந்தான் } இரண்டாம் வேற்றுமைத்தொகை.

தின் + சோறு = தின்சோறு
தின் + தினை = தின்றினை } வினைத்தொகை.

உண்பான் + சென்றேன் = உண்பான் சென்றேன்
உண்பான் + தங்கினேன் = உண்பான் றங்கினேன் } வானீற்று வினையெச்சம்.

பிறப்பான் + பிள்ளை = பிறப்பான்பிள்ளை
பிறப்பான் + தனயன் = பிறப்பான் றனயன் } வினைமுற்றுத் தொடர்.

ஒன்றன் + தொகுதி = ஒன்றன் றொகுதி
நீரின் + தண்மை = நீரின் றண்மை
ஆன் + தோல் = ஆன்றோல் } னகர ஈற்றுச் சாரியைகள்.

குடிப்பவன் + தன்மை = குடிப்பவன் றன்மை—வினையாலணையும் பெயர்.

குறிப்பு:—வெண் திண் நுண் தண் போன்ற பண்படிகளின் ஈற்று ணகர மெய், வருமொழி முதலில் வல்லினம் நிற்க, டகரமாகத் திரியாமற் புணர்வது போன்றே (891-வது பக்கம்), இன் வன், புன், போன்று பண்புப் பெயர்கள் விகாரப்பட்டு நிலைமொழிகளாய் நிற்குங்கால், அவ்வீற்று னகரமெய் றகரமாகத் திரியாது. வருமொழி முதல் வந்த தகரம்மாத்திரம் றகரமாகத் திரியும்.

வன் + பழி = வன்பழி
வன் + தாள் = வன்றாள் }
இன் + சொல் = இன் சொல்
இன் + துயில் = இன்றுயில் }
புன் + பொறி = புன்பொறி
புன் + தலை = புன்றலை }

அவ்வாறே, 'ஙனம்' என்னுஞ் சொல் ஈறுகெட்டு ஙன் என நின்று, அங்ஙன் இங்ஙன் எங்ஙன் என வருங்கால் அதனீற்று னகரமெய், வருமொழி முதலில் வல்லினமெய் வர, றகரமாகத் திரியாது. வருமொழிமுதல் வந்ததகரம் மாத்திரம் றகரமாகத் திரியும்.

இங்ஙன் + கூறினான் = இங்ஙன் கூறினான்
இங்ஙன் + தேம்பினான் = இங்ஙன் றேம்பினான்
எங்ஙன் + செல்வேன் = எங்ஙன் செல்வேன்
எங்ஙன் + தேடுவேன் = எங்ஙன் றேடுவேன்

இப்படியே, மான்றோல், மகன்றலை, அரசன்றிரம் என மற்ற உதாரணங்களையும் அமைத்து நோக்கிப் பயின்றுகொள்க.

குறிப்பு:—உயிரீற்றுச் சொற்களின்பின்னர் வருமொழிமுதல் வல்லினமெய் இரண்டாம்வேற்றுமைத் தொகையில் மிகாதென்றும், ஆனால் 'புலி கொன்ற யானை' என்பதுபோல் இரண்டாம்வேற்றுமைத் தொகை எழுவாய்த்தொடரொடு மயங்குமிடங்களில், இரண்டாம்வேற்றுமைத் தொகையாயின் புலிக் கொன்ற யானை என வலிமிகுந்தும், எழுவாய்த் தொடராயின் புலி கொன்ற யானை என மிகாமலும் புணரும் என்றும் முன்னர்க் கூறியிருப்பது நினைவில் இருக்கலாம். இப்படியே னகர மெய்யீற்றுப் புணர்ச்சியிலும் நினைவிற் கொள்வதற் கொன்றுளது.

'அரசன் கொன்ற புலி' என்னு மிவ்வாக்கியம் அரசன் புலியைக் கொன்றானென்றேனும், புலி அரசனைக் கொன்றதென்றேனும் பொருள்கொள்ள இடந்தரும். சந்தர்ப்பத்தின்படி கொல்லப்பட்டது புலியானால் 'அரசன் கொன்ற' என்பது எழுவாய்த் தொடர்—னகர மெய் இயல்பாகப் புணரும். ஆனால் கொன்றது புலியானால் 'அரசன் கொன்ற' என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகை. இப்படி மயக்கம் விளையக்கூடிய இடங்களில், பொருளின்படி இரண்டாம் வேற்றுமைத் தொகையின் அரசற் கொன்ற யானை, என நிலைமொழி யீற்று னகர மெய் றகரமாகத் திரிந்தும், எழுவாயாயின் 'அரசன் கொன்ற யானை' எனத் திரியாமலும் புணரும் என்று கொள்ளலாம்.




கலா நிலயம்

1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவியவியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரடரிக்நிஷேயண், எபிகுயூரன், ஜினோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1 கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணாமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

| உள்நாடு | ரூ. | அ. | ப. | வெளிநாடு | ரூ. | அ. | ப |
|---|---|---|---|---|---|---|---|
| பையிண்டு செய்யாதது | 8 | 0 | 0 | பையிண்டு செய்யாதது | 9 | 8 | 0 |
| காலிகோ கில்ட் | 9 | 8 | 0 | காலிகோ கில்ட் | 11 | 0 | 0 |
| ஆப்லெதர் கில்ட் | 10 | 0 | 0 | ஆப்லெதர் கில்ட் | 11 | 8 | 0 |

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

இனம்! இனம்!!

## வைத்திய வித்தியா

யௌவனம் என்னும்பொக்கிஷத்தையும்ஆரோக்கியமென்னும் குன்றாத செல்வத்தையும் விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் இப் புத்தகத்தை வாசித்துச் சுகமடையலாம்.

மதனமஞ்சரி பார்மஸி,
1/94, சைனா பஜார், மதராஸ்.

## கந்தபுராண வெண்பா

வெண்பாப் புலி வேலுசாமி அவர்களால் பாடப்பெற்றது. தமிழரால் போற்றப்படுவதற் குரியது.

ஆறு காண்டங்களையும் 5665 சிறந்த நேரிசை வெண்பாக்களையு முடையது.

விலை ரூபா 4. தபால் செலவு வேறு.

EDUCATIONAL PUBLISHING CO.
Nungambakam, Madras.

இலக்கியத் துறையதான எந்தப் புத்தகம் வேண்டுமானாலும் எமக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

கலா நிலயம் ஆபீஸ்,
வேளாளர்தெரு, புரசைபாக்கம், சென்னை

Estd. NATIONAL 1906
INSURANCE COMPANY LIMITED.
*Head Office*:-9, Old Court House St., Calcutta.

Before taking out a life assurance policy it is better to apply all the rigid tests for a good company.

*The "National" will surpass any other Company in these tests.*

(1) Indian Capital-Indian Management-for the benefit of Indians.
(2) The Company has never contested a claim on a technicality.
(3) The low safe rates of premium provide maximum assurance at minimum cost.

The "National" keeps well ahead of the times and its policy of 'fair and square dealing' which began with its founding, ever since 1906, has been continuous.

For Particulars & Agency terms.
Apply to:— R. G. DAS & CO., *Managers.*
T. ANANTACHARI, B.A.,
Branch Secretary.

NATIONAL INSURANCE COMPANY LTD.,
Madras Branch, Loane Square,
Broadway, Madras.

அறிக்கை.

கலாநிலயத்தின் முதலிரண்டாண்டு பைண்ட் புத்தகங்கள் மிகச் சிலவே இருக்கின்றன. வேண்டுவோர் விரைவில் வரைக.

கலா நிலயம் ஆபீஸ்,
வேளாளர்தெரு, புரசைபாக்கம், சென்னை

## எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

### பெருமாள் திருமொழி

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத்தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ. 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த

### ஆறெழுத்தந்தாதி

முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுள்ளார் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல் பென்ஷன் டாக்டர் V. S. அருணாசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணா 12.

### கம்பராமாயணம்—பாலகாண்டம்

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் -புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரையும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

### ஏமாங்கதத் திளவரசன்

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேராவின் பேதமையும், புன்கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும், பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ. 1.

### முருகன்—ஓர் உழவன்

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ண குமாரிசெய்த சிறந்த மொழிபெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந் நாவல் நூல் எடுத்துக் காட்டுகின்றது. விலை ரூ. 1-8.

விலாசம்:—கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.




# வர்த்தமானம்

நவீன பாரதி:—மதுரை ஜில்லா உத்தமபாளையத்திலிருந்து வெளிவந்த பாரதி யென்னும் பத்திரிகை இனிமேல் நவீனபாரதி என்றபெயருடன் வெளிவரும் என்றும், இந் நவம்பர் கடைசியில் முதல் பிரதியைப் பிரசுரஞ் செய்ய ஏற்பாடுகள் நடந்துவருகின்றன வென்றும், மேற்படிகார்யாலய மானேஜர் ரா.சுப்பிரமணியம் செட்டியார் அறிவிக்கின்றார்.

***

மதிப்புரை (பர்மிய பால போதினி):—இரங்கூனிலிருக்கும் நவீன கதா புத்தக சாலையார் பர்மிய பால போதினியின் இரண்டாம் பாகத்தை எமது பார்வைக்கு அனுப்பியிருக்கின்றனர். சிறிதுகாலத்திற்கு முன் அவர்கள் முதல் பாகத்தை வெளியிட்டனர். அதைப் படித்தவர்கள், பர்மியபாஷையில் அடுத்தபடியாகப் பயில்வதற்கென இது வெளியிடலாயது. இப் பாலபோதினியில் கையாளப்பெற்றுள முறை புதியதும் எளியதும் ஆகும். இப்பாஷையைப் பயில விரும்புவோர்க்கு இது மிகவும் உதவியாயிருக்கும். வேண்டுவோர் இரங்கோன் மங்கமாரி வீதியிலுள்ள நவீன கதா புத்தகசாலைக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

விலை அணா 4.

***

இந்தியர் ஒளி:—தென் ஆப்பிரிக்காவில் இருக்கும் இந்தியர்களின் பொது நலங் கருதி இம் மாதவெளியீடு வரலாயிற்று. 'சமயம், கல்வி, ஆசாரம், கைத்தொழில், வர்த்தகம் முதலியவைகளின் வளர்ச்சியைக் கருதுவது கருதியது இப்பத்திரிகை என்பது தலையங்கத்தால் தெரியலாகின்றது. எமக்கு வந்த இதழ்களில் உள்ள கட்டுரைகளும், இந்நோக்கத்தோடு இயைபுள்ளவைகளாகவே இருக்கின்றன. டர்பன், 15-நம்பர் பவுண்டரி லேன் இப்பத்திரிகையின் கார்யாலயம். வருடசந்தா ரூ. 10-0-0 ஆறு மாதத்திற்கு ரூ 5-0-0.

***

லண்டனில் கூடிய சர்வகட்சி மஹாநாட்டில் இந்திய அரசில் திருத்த விஷயமாய் வந்திருக்கும் இந்தியப் பிரதிநிதிகள் தங்கள் கோரிக்கையைக் கூறியபிறகு பிரதமமந்திரி ராம்ஸே மாக்டொனல்டு பேசியதின் சுருக்கம்வருமாறு:—"இந்தியப்பிரதிநிதிகளின் அபிப்பிராயத்தையும் விசேஷநம்பிக்கையை உண்டுபண்ணக் கூடிய சுதேச மன்னர்களுடைய அபிப்பிராயங்களையும் இம்மஹாநாட்டார் கேட்டனர். இந்தியாவிலுள்ள ஒவ்வொரு வகுப்பின் பிரதிநிதிகளும் பேசினர். மாதர் பிரதிநிதியாகவந்திருக்கும்மிஸஸ்சுப்பராயனையும்கேட்டோம். எனவே இந்தியாவில் புதிய உணர்ச்சி வலியுற்றுவருகின்றது என்பது தெரியலாகின்றது. அவ்வுணர்ச்சிக்குத் தக்கபடி இந்தியா முன்னேற வேண்டும். நாம் இனிப்பின்போக முடியாது. எனவே பிரிட்டிஷாரும் இந்தியப்பிரதிநிதிகளும் நட்புமுறையில் ஒரு சமரச ஏற்பாட்டிற்கு வரவேண்டும். கனம் சாஸ்திரியார் தமது அரிய பிரசங்கத்தில் எல்லாருடைய மனத்திலும் ஒருவித மாறுதல் ஏற்பட்டுள்ளதென்றும், ஒற்றுமையான முறையில் இந்திய விஷயம் தாராள சிந்தையுடன் முடிவு செய்யப்பட வேண்டுமென்றும் குறித்துள்ளார்.

"சிறுபான்மையானவர்களின் கோரிக்கையும் அறிந்தோம். அவர்கள் கூறியவைகளும் கவனிக்கப்படும் என்று உறுதிகூறுகின்றேன். நாம் இங்கே வாதங்கள் புரிந்துசெல்ல வரவில்லை. ஒரு காரியத்தை முடிக்கும் நோக்கத்துடன் கூடியிருக்கின்றோம். காரியம்முடிவு பெறுவதற்கான வழியில் எல்லோரும் முயலவேண்டும். 1800-ம் ஆண்டில் நாம் கையாண்ட முறை அச்சமயம் பொருத்தமுடையதாகவே யிருந்தது. இப்பொழுது 1930-ம் ஆண்டில் நாம் இருக்கின்றோம். இப்பொழுது உலகமும் இந்தியாவும் இருக்கும் நிலைமைக்குத் தக்கபடி காரியங்கள் நிகழவேண்டும். 1917-ம் வருடத்திலும் அதற்குப் பின்னரும் நாம் கொடுத்த வாக்குறுதியின்படி நாம்நடக்கவேண்டுவது அவசியமாகும். 1926-ம் வருடம் கூடிய ஏகாதிபத்திய மஹாநாட்டில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் கூறியவற்றினின்று இப்பொழுது பின்போகமாட்டார்கள். 1926-ம் ஆண்டில் கூறியபடி செய்யவே நாம் இப்பொழுது சிநேக பாவத்துடன். இங்கே கூடியிருக்கின்றோம். இதில் காரியம் நடப்பதற்குப் பிரதிநிதிகளின் கூட்டுறவு வேண்டும். பிரதிநிதிகளின் பிரசங்கத்தினின்று அக்கூட்டுறவு கிடைக்கும் என்று தெரிகின்றது.

"சுதேச மன்னர்களுடைய பிரசங்கம் புதிய நிலைமையை உண்டுபண்ணிவிட்டது. எனவே நாம் கண்ணைத் துடைத்துக்கொண்டு, ஏற்பட்டுள்ள புதிய நிலைமையைப் பார்க்க வேண்டும். இந்தியாவில் ஒரு பிடரல் அரசாங்கம் ஏற்படுவதற்குச் சுதேச மன்னர்கள் சிறந்த உதவியைப் புரிந்துவிட்டனர். நமது பொதுவான ஆரிய நாகரிகத்தில், நமது பொதுவான ஆரிய சமுக ஏற்பாட்டில், நாம் இப்பொழுது செய்வது ஒரு குடும்பஏற்பாடாகும். அடிப்படையான விஷயங்களில் நாமெல்லாம் ஒரே ஆரம்ப சரித்திரமுடையவர்கள். இதை மனதில் இருத்திக்கொண்டு நமது ஆரியசமுதாயத்து ஒருகுடும்பத்தைப்பற்றி ஒரு முடிவு செய்யவேண்டும்.

இனி நாம் முடிவாகச் செய்ய வேண்டியவைகளைப் பற்றிச் சிந்திப்பேன். பெடரேஷனில் சேரக்கூடிய சிறு பாகங்களின் தன்மை, மத்திய அரசாங்க ஸ்தாபனத் தன்மை மத்திய ஸ்தாபனத்திற்கும் சுதேசநாடுகளுக்குமுள்ள தொடர்பின் தன்மை ஆய இவைகளைப்பற்றித் தீரக் கலந்துயோசித்து ஒரு முடிவை நாம் காண வேண்டும். சிறுபான்மையர் விஷயமும் நமது ஏற்பாட்டில் காக்கப்படவேண்டும். மத்திய அரசாங்க ஸ்தாபனத்தின் அதிகாரம் பொறுப்பு ஆகிய விஷயங்களும் நிர்ணயிக்கப்படவேண்டும். இதற்கு நாம் செய்ய வேண்டுவதென்ன என்பதே இனிப்பிறக்கும் கேள்வி. நாம் அழகாக மஹாநாட்டில் பேசுவதால் காரியங்கள் நடந்துவிடா. இவ்விஷயங்களை நன்கு ஆய்ந்து, முடிவு ஒன்றை ஏற்படுத்தவேண்டும். பின் அம்முடிவைப் பார்லிமெண்டின் ஆலோசனைக்கு விடுத்துச் சட்டமாகும் வழியில் முயலவேண்டும். இதுதான் நாம் இனிச் செய்யவேண்டிய வேலை. இவ்வேலையில் இறங்குமுன் நாம் ஒரு முக்கிய விஷயத்தை மறக்கலாகாது. நாம் செய்யும் முடிவு நடைமுறை அனுஷ்டானத்திற்கு வருவதற்கு ஏற்றதாயிருக்க வேண்டும். இரண்டாவதாக, மெதுவாக அது வளர்ந்து இந்தியர் சிறிதுசிறிதாக அரசியல்பொறுப்பை வகிக்குமாறு செய்துகொண்டுபோய் முடிவில் இந்தியர் தங்களைத் தாங்களே ஆளுவதில் சேர்க்கவேண்டும். அத்தகைய திட்டந்தான் இயற்கையான பொருத்தமாகும். இருபெரு நாட்டாரும் நட்புடன் இருந்து அரசியலை அப்பொழுதுதான் வளர்க்க முடியும். இப்படித்தான் நமது குடியேற்ற நாடுகளும் முன்னேறி யிருக்கின்றன."

18913

KALANILAYAM.
REG. NO. M, 2324.


## அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (உதாரணங்க ளுடன்)—மூன்று பாகம் ... ரூ. 18 அ. 8

தமிழ்மொழி அகராதி
The Coronation Tamil Dictionary ... ... 10 0

தமிழ் - தமிழ் - இங்கிலீஷ் அகராதி.
வி. விச்வநாதபிள்ளை இயற்றியது :: 676 பக்கங்கள்

எல்லாப் பதங்களுக்கும் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு சொல்லுக்கு மிருக்கிற பல பொருள்களும் அவைகளுக்கு நேர் நேரே ஆங்கில மொழிபெயர்ப்பும் கொண்டது. வி. பி. செலவு வேறு. விலை ரூபா 6 0 0.

## :: திருக்குறள் ::

மூலமும், சொற்குறிப்பு அகராதியும், விஷய ஒப்புக் குறளும்; வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு.

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 800-பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப்படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதன் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

வி. பி. செலவு வேறு. விலை அணா 12.

கலாநிலயம்,
11, வேளாளர் தெரு, புரசை, சென்னை.



## நன்கறிந்த ஜீவன் - - - - - - ச்யவன் ப்ராஷ்

நிகரற்ற ஆயுர்வேத டானிக். இருமல், சளி,




க்ஷயம், இழுப்பு முதலிய வியாதிகளுக்கு நல்ல மருந்து. இரத்தத்தை விருத்திசெய்து ஞாபகசக்தியைக் கூர்மைப் படுத்தும். நீண்ட ஆயுளும் தேக ஆரோக்கியமும் நல்ல சக்தியும் தரவல்லது.

விலை:—1 பவுன் ரூ. 2-8-0. ½ பவுன் ரூ. 1-5-0.
பாகிங் தபால் செலவுகள் வேறு.

குஜராட் ஆயுர்வேத பார்மஸி, அகமதாபாத்; என்னுமிடத்தில் செய்யப்பட்டது.

ஸோல் ஏஜெண்ட்ஸ்:—

சீதாராம் மெடிகல் ஸ்டோர்ஸ்,
87. நயனியப்ப நாயகன் தெரு,
பார்க் டவுன், சென்னை.

குறிப்பு:—மெடிகல் அட்வைஸ் இனமாகக் கொடுக்கப்படும். பதிலிற்கு ஒரு அணா தபால் தலை அனுப்பவும். காட்லாக் இனம்.



ஒட்டக்கூத்தர் பாடிய

## தக்கயாகப் பரணி

மகாமகோபாத்தியாய உ. வே. சுவாமிநாத ஐயர் பதிப்பு.

(உரையுடன்)

இதுவரையில் அச்சேறாத இவ்வரிய நூல் இப்பொழுதே வெளிவந்துளது. விலை ரூ. 4—0—0. வி. பி. செலவு வேறு.

விலாசம் :—கலாநிலயம்: 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.



## கம்பராமாயணம்.

(மூலமும் உரையும்)

வை. மு. சடகோப ராமானுஜாசாரியார்,
சே. கிருஷ்ணமாசாரியார்,
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கி யிருக்கின்றன. உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

| | | |
|---|---|---|
| பால காண்டம் ... | ரூ. | 5. |
| அயோத்தியா காண்டம் | ரூ. | 5. |
| ஆரண்ய காண்டம் ... | ரூ. | 4. |
| கிஷ்கிந்தா காண்டம் ... | ரூ. | 4-8. |
| சுந்தர காண்டம் ... | ரூ. | 5. |

(வி.பி. செலவு வேறு)

மானேஜர்:—கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.



## நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனுமாய
கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார். போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில்உயர்தரக் கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு).

மானேஜர் :—“ கலா நிலயம் ”,
11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)